Registerd as a News Paper | பக்கங்கள் 06 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 32 | [14-06-98] | திங்கட்கிழமை | ஓசை 116

Y·M·C·A

## சம்பள திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆசிரியர் சங்கங்கள் வற்புறுத்து

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்ட ஐந்து வகையான சம்பளத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தாதது குறித்து நாட்டில் உள்ள 1,86,000 ஆசிரியர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்பது ஆசிரியர் சங்கங்கள் தமது கண்டனத்தை கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளன. அகில இலங்கை அரச ஆங்கில ஆசிரியர்கள் சங்கம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது. ஐந்து வகையான சம்பளத் திட்டங்களும் வருமாறு : தரம் ஒன்று — ரூபா 72,000 — 1,08,000 — (10 × 3600), தரம் 2 — ரூபா 55,200 — 72,000 — (7 × 2400), தரம் 3 — ரூபா 42,000 — 54,600 — ( 2 × 1200 — 3 × 1800 — 2 × 2400 ), [ 6 ஆம் பக்கம் பார்க்க ]

# சமாதானக் குழுவின் சிபார்சுகளை அரசு ஏற்கவேண்டிய அவசியமில்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் ஹரல்ட் ஹேரத்

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய சர்வதேச சமாதானக்குழுவினர் செய்யும் சிபார்சுகளை அரசாங்கம் ஏற்கவேண்டிய கட்டாயம் இல்லை எனவும், அத்தூதுக்குழுவினர் யாழ். செல்லமுன் அரசாங்கத்துடன் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை எதனையும் நடத்தவில்லை எனவும் சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளர் ஹரல்ட் ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டின்போதே மேற்கண்ட விபரங்களைத் தெரிவித்தார்.

மேலும், விடுதலைப் புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தை குறித்து சமாதானக்குழுவினர் தமக்கு அறிவிப்பர் என தான் நம்புவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் உத்தியோகப் பற்றற்ற முறையில் இக்குழுவினர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்தினவை சந்தித்தனர் எனவும், குழுவினர் அவருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் திருப்திகொண்டு அவர்களின் யாழ்ப்பாண பயணத்திற்கான விமான ஒழுங்குகளைச் செய்து கொடுத்திருக்கலாம் எனவும் ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் கேணல் அங்கமன சமாதானக் குழுவினர் யாழ்ப்பாணம் செல்ல தாமே விமான ஒழுங்குகளைச்செய்ததாகவும்' பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைத்த பணிப்பை அடுத்தே இவ் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் ஜனாதிபதி டி பி, விஜயதுங்காவைக் கொலைசெய்ய திட்டமிருப்பதாக பத்திரிகைகளில் வந்த செய்திகள் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றும், ஆனால் முன்னரைவிட ஜனாதிபதி பாதுகாப்பு விடயத்தில் அதிக கவனம் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் மாநாடு; பொலிசார் அசட்டை

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தப் பத்திரிகையாளர்கள் மாநாட்டிற்கு பொலிசார் தரப்பில் எவரும் வராதது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் ஹரல்ட் ஹேரத்ஆச்சரியமும்,கோபமும் அடைந்தார்.

பத்திரிகையாளர் முன்னிலையில் இதனை வெளிப்படையாகத் தெரிவித்த அவர் வெறும் கதிரை ஒன்று இருப்பதைக் காட்டி எவராவது

### அமைச்சர் ஆச்சரியம்

கொலை தொடர்பான விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பத்திரிகையாளர்களுக்கு விளக்குவதற்காக பொலிஸ் அதிகாரி ஒருவரை அழைத்து வருவதாகக் கூறப்பட்டிருந்தது. பிரதிநிதி ஒருவரை அனுப்புவதாக பொலிசார் எனக்கு உறுதி அளித்திருந்தனர். ஆனால் அவர்கள் தமது வாக்குறுதி

வடக்குக் கிழக்கு பகுதியில்

## வீரகுமார் பற்றிய பிரசுரம் இன்று வீசப்படுமாம்

(கொழும்பு)

ஜனாதிபதிபிரேமதாசாவை கொலை செய்தது தொடர்பாக சந்தேகிக்கப் படுபவரான சாவகச்சேரியைச் சேர்ந்த குலசிங்கம் வீரகுமார் (23) என்பவரின் புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் இன்று வடக்கு கிழக்கு பகுதிகளில் உலங்கு வானூர்தி மூலம் வானிலிருந்து போடப்படவுள்ளன.

இதன் மூலம் சந்தேக நபரின் விபரங்களை ஊர்ஜிதப் படுத்த தமிழ் மக்களின் தகவல்கள் உதவியாக இருக்கும் என கொழும்பில் குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகள் [6ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவு காவலரண்மீது புலிகள் தாக்குதல்

### திருத்தம் உடனடியாக இல்லை

(கொழும்பு)

அரசியலமைப்பில் பாரிய திருத்தம் எதையும் உடனடியாக கொண்டுவருவதற்கான உத்தேசம் எதுவுமில்லை, என வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பி. சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை, விகிதாசார தேர்தல் முறை ஆகிய விவகாரங்கள் (6 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுநிலை குறித்து ஆராய யாழ். வந்துள்ளேன்

### தேவநேசன் நேசையா தெரிவிப்பு

(நெல்லியடி)

''வடபகுதியில் நிலவும் உணவுத் தட்டுப்பாடுகளும் இதனால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களையும், சேதமடைந்துள்ள இடங்களையும் நேரில் பார்த்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே, வடபகுதிக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளேன்''.

இவ்வாறு, நேற்று காலை குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும், சூழல் பாதுகாப்பு பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, எமது நெல்லியடி செய்தியாளருக்கு வழங்கிய விசேட பேட்டியின் போது தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்;

பருத்தித்துறை இறங்குதுறையில் உள்ள இழுவைப் படகுகள் துவாரமடைந்து சேதமுற்றிருப்பதை தான், முதன் முதலாக நேரில் பார்த்ததாகவும் இங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் இதனால் பெரிதும் கஷ்டமடைவதைக் காண முடிந்ததென்றும், இதுபற்றி தான் கொழும்பு திரும்பியதும் நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாகவும் கூறிய திரு. தேவநேசன் நேசையா,

வடபகுதியில் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் உணவுப் பற்றாக்குறையையும், சேதமுற்றுள்ள இடங்களை நேரில் பார்த்து அவை பற்றி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதற்காகவே, தனது உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டதாகவும். கொழும்புத்துறைமுகத்திலிருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற்கே தனக்கு அதிகாரம் உண்டென்றும் தெரிவித்தார்.

கிளாலிக் கடலில் காவியமான

தொடர்புடையோர் கேட்டுக்கொண்டால்

## தபால் விநியோகத்தை சீராக்க உதவ முடியும்

[யாழ்ப்பாணம்]

''யாழ். குடா நாட்டுக்கான வெளியூர்த் தபால் விநியோகத்தை வாரம் ஒரு தடவை நடாத்துவதற்கு முயற்சி எடுக்க முடியும் இம் முயற்சியின் தேவை குறித்து யாழ். அரசாங்க அதிபர், வடபகுதி தபால் அத்தியட்சகர் ஆகியோர் கேட்டுக்கொள்ளும் பட்சத்திலேயே இது சாத்தியமாகும்.'' இவ்வாறு தற்பொழுது யாழ்ப்பாணம் வந்துள்ள சூழல் பாதுகாப்பு பாராளுமன்ற

மேலும், விடுதலைப் புலிகளுடன் நடாத்திய பேச்சு வார்த்தை குறித்து சமாதானக்குழுவினர் தமக்கு அறிவிப்பர் என தான் நம்புவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் உத்தியோகப் பற்றற்ற முறையில் இக்குழுவினர் புனர்வாழ்வு புனர்யாழ்ப்பாண பயணத்திற்கான விமான ஒழுங்குகளைச் செய்து கொடுத்திருக்கலாம் எனவும் ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் கேணல் அங்கமன சமாதான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டதாகவும் தெரிவித்தார்.

செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் என்றும், ஆனால் முன்னரை விட ஜனாதிபதி பாதுகாப்பு விடயத்தில் அதிக கவனம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் மாநாடு; பொலிசார் அசட்டை

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தப் பத்திரிகையாளர்கள் மாநாட்டிற்கு பொலிசார் தரப்பில் எவரும் வராதது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் ஹரல்ட் ஹேரத்ஆச்சரியமும், கோபமும் அடைந்தார்.

பத்திரிகையாளர் முன்னிலையில் இதனை வெளிப்படையாகத் தெரிவித்த அவர் வெறும் கதிரை ஒன்று இருப்பதைக் காட்டி எவராவது வருகிறார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம் எனவும் தெரிவித்தார்.

லலித் அத்துலத் முதலியின்

### அமைச்சர் ஆச்சரியம்

கொலை தொடர்பான விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பத்திரிகையாளர்களுக்கு விளக்குவதற்காக பொலிஸ் அதிகாரி ஒருவரை அழைத்து வருவதாகக் கூறப்பட்டிருந்தது. பிரதிநிதி ஒருவரை அனுப்புவதாக பொலிசார் எனக்கு உறுதி அளித்திருந்தனர். ஆனால் அவர்கள் தமது வாக்குறுதியைக் காப்பாற்றிக் கொள்ளாததையிட்டு நான் வருந்துகிறேன் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு பகுதியில்

## வீரகுமார் பற்றிய பிரசுரம் இன்று வீசப்படுமாம்

(கொழும்பு)

ஜனாதிபதிபிரேமதாசாவை கொலை செய்தது தொடர்பாக சந்தேகிக்கப் படுபவரான சாவகச்சேரியைச் சேர்ந்த குலசிங்கம் வீரகுமார் (23) என்பவரின் புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் இன்று வடக்கு கிழக்கு பகுதிகளில் உலங்கு வானூர்தி மூலம் வானிலிருந்து போடப்படவுள்ளன.

இதன் மூலம் சந்தேக நபரின் விபரங்களை ஊர்ஜிதப் படுத்த தமிழ் மக்களின் தகவல்கள் உதவியாக இருக்கும் என கொழும்பில் குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகள்

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவு காவலரண் மீது புலிகள் தாக்குதல்

### ஓர் இராணுவம் பலி

[கொழும்பு]

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் சுட்டுக கொல்லப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு 11-30 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமின் வடக்குப்பகுதியில் அமைக்கப் பட்டிருந்த காவலரண் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் இதன் போது அக்காவலரணில் கடமையில் ஈடுபட்டிருந்த ஏ. கே. வி. கே. டி. சில்வா என்ற இராணுவ சிப்பாய் கொல்லப் பட்டதாகவும் கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

யும் நேரில் பார்த்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே, வடபகுதிக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளேன்''.

இவ்வாறு, நேற்று காலை குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும், சூழல் பாதுகாப்பு பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, எமது நெல்லியடி செய்தியாளருக்கு வழங்கிய விசேட பேட்டியின் போது தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்;

பருத்தித்துறை இறங்கு துறையில் உள்ள இழுவைப் வதைக் காண முடிந்ததென்றும், இதுபற்றி தான் கொழும்பு திரும்பியதும் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாகவும் கூறிய திரு. தேவநேசன் நேசையா,

வடபகுதியில் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் தமிழ் பதற்காகவே, தனது உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டதாகவும். கொழும்பு புத்துறைமுகத்திலிருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற்கே தனக்கு அதிகாரம் உண்டென்றும் தெரிவித்தார்.

கிளாலிக் கடலில் காவியமான

## மாவீரர்களுக்கு இன்று வடமராட்சியில் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கடந்த வெள்ளி கிளாலி கடற்பரப்பில் மக்கள் பாதுகாப்பு பணியின்போது சிறிலங்கா கடற்படையுடனான கடற்போரில் வீரச்சாவு எய்திய கடற்புலிகளின் கடற் தாக்குதல் தளபதி லெப். கேணல் புலேந்திரன், லெப். மகான் ஆகியோரின் புகழுடல்களுக்கு நேற்று குடாநாடு எங்கும் அஞ்சலி செலுத்தப் பட்டது.

நேற்றுக்காலை 8 மணிக்கு லெப். கேணல் புலேந்திரனின் புகழுடல் இன்பருட்டியிலிருந்தும் லெப். மகானின் புகழுடல் கல்வியங்காட்டிலிருந்தும் ஊர்வலமாக அச்சுவேலி பஸ் நிலையம் எடுத்துவரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது அங்கு அஞ்சலிக் கூட்டமும் நடந்தது. அங்கிருந்து புகழுடல்கள் ஊர்வலமாக ஆவரங்கால், புத்தூர், புன்னாலைகட்டுவன் வழியாக சுன்னாக சந்தை மைதானத்திற்கு எடுத்துவரப் பட்டு அங்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

தொடர்புடையோர் கேட்டுக்கொண்டால்

## தபால் விநியோகத்தை சீராக்க உதவ முடியும்

[யாழ்ப்பாணம்]

''யாழ். குடா நாட்டுக்கான வெளியூர்த் தபால் விநியோகத்தை வாரம் ஒரு தடவை நடாத்துவதற்கு முயற்சி எடுக்க முடியும் இம் முயற்சியின் தேவை குறித்து யாழ். அரசாங்க அதிபர், வடபகுதி தபால் அத்தியட்சகர் ஆகியோர் கேட்டுக்கொள்ளும் பட்சத்திலேயே இது சாத்தியமாகும்.'' இவ்வாறு தற்பொழுது யாழ்ப்பாணம் வந்துள்ள சூழல் பாதுகாப்பு, பாராளுமன்ற விவகார அமைச்சின் செயலாளர் திரு. தேவநேசன் நேசையா தெரிவித்தார்.

குடா நாட்டுக்கான தபால் பொதிகள் கொழும்பில் மாதக் கணக்காகத் தேங்கிக் கிடக்கிறது. இவற்றை குடாநாட்டுக்கு அனுப்பி வைப்பதில் பல் வேறுதடங்கல்கள்உள்ளன இது தபால் திணைக்களம், சுங்கத் திணைக்களம், அத்தியாவசிய சேவைகள் பிரிவு ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட விடயம் என்றும் இதனைச் சீராக்குவதற்கு புதிய நடைமுறைத்திட்டங்கள் குறித்து பரிசீலிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

வாழைச்சேனை நகரில்

# ரெலோ அலுவலகம் மீது புலிகள் தாக்குதல்

## இருவர் பலி: இருவர் காயம்

வாழைச்சேனை ரெலோ அலுவலகம் மீது கடந்த புதன் மாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ரெலோ உறுப்பினர் இருவர் பலியாகினர் இருவர் காயமடைந்தனர். விடுதலைப் புலிகளின் 10 பேர் கொண்ட குழுவொன்று இத் தாக்குதலை நடத்தியதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவிககிறது.

வாழைச்சேனை பிரதேச ரெலோ குழுப் பொறுப்பாளர் அருள்தாசன் என்பவர் ஸ்தலத்தில் பலியானார். காயமடைந்த மூவர் இராணுவத்தினரால் பொலநறுவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டனர்.

இராணுவச் சீருடையில் வந்த புலிகள் புதன் மாலை 6.45 மணியளவில் பிரதான வீதி வழியாக சைக்கிளில் நகருக்குள் பிரவேசித்தனர். ரெலோ அலுவலகத்தை நெருங்கியதும் அவர்களை இராணுவத்தினர் என்றே அங்கு நின்றவர்கள் எண்ணினராம். வந்தவர்கள் ஏதோ பேசவேண்டியுள்ளதாகக் கூறி ரெலோ அலுவலகத்தினுள் நுழைந்து சரமாரியான துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு வந்த சைக்கிளிலேயே திரும்பி விட்டனர்.

இச்சம்பவத்தையடுத்து வாழைச்சேனை இராணுவ கப்டன் மாரப்பன பொலிஸ் அதிகாரி றசீட்முகமட் ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்தனர்.

# ஏறாவூரில் கிணற்றிலிருந்து 3 மனித எலும்புகூடுகள் மீட்பு

(கொழும்பு)

ஏறாவூர் பகுதியில் உள்ள தளவாய் என்ற இடத்தில் கிணறுகளை சுத்தமாக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது கிணறு ஒன்றுக்குள் இருந்து மூன்று மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஏறாவூர் பகுதியில் சவுக்கடி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, தளவாய் ஆகிய தமிழ்க்கிராமங்களில் இருந்து வெளியேறிய குடும்பங்களை மீளக் குடியேற்ற புனர்வாழ்வுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இதற்கென அங்கு பாழடைந்து கிடக்கும் கிணறுகள் யாவற்றையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சுத்திகரித்துவருகின்றது.

இப் பணிகளின்போது கிணறு ஒன்றுக்குள் மூன்று மனித எலும்புக்கூடுகள் கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்து அந்தக் கிணற்றை மூடிவிடுமாறு அதிகாரிகள் பணித்துள்ளனர்.

தளவாய் கிராமத்தில் 1990 ஜூன் மாதத்தில் ஆரம்பமான இராணுவ வன்செயல் சம்பவங்களின்போது பல தமிழர்கள் காணாமல் போயிருந்தனர் என்பது தெரிந்ததே கண்டெடுக்கப்பட்டவை அவர்களது எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

# விடுதலை கிடைக்கும் என நம்பியே போராட்டத்தை ஆரம்பித்தோம்

## பொலிஸ் உண்ணாவிரதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''நாம் மரணத்துடனான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். நாம் விடுவிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையிலேயே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். எனினும் நாம் இறந்து விட்டால் எம் விடுதலைக்காக நாம் இதைச் செய்து கொண்டோம் என்றும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதும் மக்களுக்கும் படையினருக்கும் தெரிய வரும்'' இவ்வாறு விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள சிறிலங்கா பொலிசார் புலிகளின் குரல் வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறினர். போர்க் கைதிகளான இவர்கள் தம்மை அரசு விடுவிக்க முயற்சிக்குமாறு கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை தற்போது ஆரம்பித்துள்ளது தெரிந்ததே.

சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை அரசு அலட்சியம் செய்யுமானால் அரச படைகளுக்கும் எங்கள் மக்களுக்கும் எதைக் கூறி வைக்க விரும்புகிறீர்கள் என்று கேட்டபோதே பொலிசார் மேற்கண்டவாறு பதிலளித்தனர். இப்பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி: நீங்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க முடிவெடுக்க காரணம் என்ன?

பதில்; நீண்டகாலமாகபுலிகளின் பாதுகாப்பில் வைக்கப் பட்டிருந்தோம். அதனால் இதுவரையிலும் எமக்கு எவ்வித விடுதலையும் கிடைக்காமையினால் விடுதலைக்காக உண்ணாவிரதம் இருக்கின்றோம்.

கேள்வி: அரசு உங்களை விடுவிக்கும் என நம்புகிறீர்களா?

பதில்: அரசு எம்மை விடுவிக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். உயிரைப் பணயம் வைத்து இப்போராட்டத்தை நடத்துவதால் அரசு நிச்சயம் எம்மை விடுவிக்கும் என எதிர் பார்க்கின்றோம்.

கேள்வி: உங்களை விடுவிக்கும்படி எத்தனை தடவை நீங்கள் அரசை கோரினீர்கள்?

பதில்: நாம் இது குறித்து புலிகளிடமும் அரசிடமும் எழுத்து மூலமாக வேண் கோள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை சங்க பிரதிநிதி கைதிகளை பார்வையிட்டார்

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் கைதிகளால் நேற்று ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

மேலும்; இக்கைதிகள் தமது போராட்டத்தின் முதலாவது வாரத்தில் நீர்மட்டும் அருந்துவார்கள் என்றும், இந்தஒரு வாரகாலத்திற்குள் தமது விடுதலை தொடர்பாக ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கா விட்டால் நீர் அருந்துவதையும் நிறுத்தப்போவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்


**EXODUS**

தாயகம் நோக்கிய பயணம் எழுதியது லியோன் யூரிஸ் (EXODUS By LEON URIS) தமிழாக்கம் இரண்டு பாகங்கள் விலை ரூபா 400/- வெளியீடு: ஈழநாதம். கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் (சி-6779)

**தவறிவிட்டது**

12ஆம் திகதி இரவு நல்லூரில் இருந்து கிளாலி வந்த படகில் 65, சிவன்பண்ணை வீதி திருமதி க. அபிமன்யூ அவர்களின் ரவலிங் பாக் காணாமல் போய்விட்டது. அதனுள் பெறுமதிமிக்க உடைமைகள் உள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [5139)


## தும்புத் தொழிற்சாலை திறப்புவிழா

அரியாலை தீவக இடம்பெயர்ந்தோர் முகாம் சாம்சன் குடியிருப்பில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக உதவியுடன், தும்புத்தொழிற்சாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. செம்மணன் அவர்கள் மங்கள விளக்கு ஏற்றி ஆரம்பித்து வைத்த இந்நிகழ்வில், தீவக துணைத்தளபதி திரு சேரமான் (யோக்கின்) அவர்கள் இந்தத் தொழிற்சாலையை திறந்து வைத்துள்ளார். இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் திரு. கௌரி, தீவக மகளிர் அமைப்பைச் சேர்ந்த தமிழ்நங்கை ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## நிர்வாகிகள் தெரிவு

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விக் கோட்ட அதிபர் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் கடந்த பத்தாந்திகதி யா/சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் புதிய நிர்வாகசபை 11 உறுப்பினர்களுள் தலைவராக எஸ். துரைராசா, செயலாளராக ஐ வரதராசா, பொருளாளராக, சி வேலாயுதபிள்ளை ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் இச்சபையின் நடைமுறைகள் பற்றி தென்மராட்சி கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு.பொ. வீரபத்திரன் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

## உற்பத்தி எழுச்சிவார போட்டி மன்னார் மாவட்ட முடிவுகள்

உற்பத்தி எழுச்சி வாரத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்திலே வலைபபாடு என்ற இடத்தில் கடந்த 26ஆம் திகதி துடி வலித்தல், நீச்சல், பாய்மரம் ஓட்டுதல், தும்புத்தடி தயாரித்தல், விளக்குமாறு தயாரித்தல், கயிறு திரித்தல், வலை பின்னுதல் ஆகிய போட்டிகள் மன்னார் மாவட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்டது-

இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விபரம்

01. துடி வலித்தல்
 - 1-ம் இடம் ச. விஜயன் நாச்சிக்குடா
 - 2-ம் இடம் ப. நீககிளான் - வலைப்பாடு
 - 3-ம் இடம் அ சுரேஷ் - வலைப்பாடு

02- நீச்சல்
 - 1-ம் இடம் க. செல்வராஜ் - கிராஞ்சி
 - 2-ம் இடம் எ. எட்வேட் அன்ரன் - வலைபபாடு
 - 3-ம் இடம் ப. ஜேசுதாசன் - வலைப்பாடு

03. பாய்மரம் ஓட்டுதல்
 - 1-ம் இடம் ச. விஜயன் - நாச்சிக்குடா
 - 2-ம் இடம் அ. சுரேஷ் - வலைப்பாடு
 - 3-ம் இடம் ச. தேவராஜா - வலைப்பாடு

04. தும்புத்தடி தயாரித்தல்
 - 1-ம் இடம் ஆ சபாரத்தினம் - கிராஞ்சி
 - 2-ம் இடம் ச. செல்வராஜா - கிராஞ்சி

05 விளக்குமாறு தயாரித்தல்
 - 1-ம் இடம் ந. உதயகுமாரி - முழங்காவில்
 - 2-ம் இடம் ஆ சபாரத்தினம் - முழங்காவில்

06. கயிறு திரித்தல்
 - 1-ம் இடம் அ. குகதாசன் - வேரவில்

07. வலை பின்னுதல்
 - 1-ம் இடம் செபஸ்தியாம்பிள்ளை
 - 2-ம் இடம் சிலுவைராசா
 - 3-ம் இடம் அந்தோனிப்பிள்ளை

# தகவல் பரிமாற்றத்திற்கு யாழ் வன்னிதொடர்புசேவை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திற்கும், வன்னிக்கும் இடையே போக்குவரத்துச் சீரின்மையைக் கருத்தில் கொண்டு தொடர்பு சேவைச் செயலகங்கள் யாழ். நகரில் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையிலும் [முன்னைய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள கட்டடத்தில்], கிளிநொச்சியில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும். தகவல் கையேற்கும் கருமபீடம், ஓமந்தை சோதனை நிலையத்திலும் வாரத்தில் ஏழு நாட்கள் காலை 9.00மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரையும், மாலை 1.30 மணி தொடக்கம் 5 00 மணிவரையும நடைபெற்று வருகின்றது எனப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இந்தச் செயலகங்களால் தகவல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் போது சலுகை அடிப்படையில் அமைந்த தகவல்கள், வியாபார நோக்கத்தின் அடிப்படையில் அமைந்த தகவல்கள் எனவும் இவை இரண்டுள்ளும் அடங்காத தகவல்களும்வழமையான தகவல்களாகக்கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகளும், மரண அறிவித்தல் செய்திகளும் குறிப்பிட்ட மாவட்ட வைத்திய அதிகாரியினால் அல்லது பிரதேச சிற்றூர் பொறுப்பாளர் அல்லது கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப் பட்டிருப்பின் இத்தகவல்சலுகை அடிப்படையிலமைந்த தகவல்களாகக் கொள்ளப்படும் 15ற்கு மேற்படாத சொற்களுக்கு ரூபா 15-ம், மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 2-ம் அறவிடப்படும்.

தத்தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்களும் கையளிப்போரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படும். தகவல்கள் வியாபாரத் தகவல்கள் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படும்போது முதல் 10 சொற்களுக்கும் ரூபா 100-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும ரூபா 15-ம் கட்டணமாக அறவிடப்படும். சலுகை அடிப்படையிலான தகவல்களிற்குள்ளும் வியாபார நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட தகவல்களிற்குள்ளும் அடங்காத மற்றைய வழமையான தகவலிற்கு முதல் 10 வரையிலானசொற்களுக்குரூபா 50-ம் மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5-ம் கட்டணமாக அறவிடப்படும்.

மற்றும் தகவல்பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணிநேர இடைவெளிக்குள் விநியோகிக்கப்படும். தகவல்கள் சாதாரண கட்டண விநியோகங்களாக எடுத்துக்கொள்ளப்படும். தகவல்கள் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணிநேர இடைவெளியில் விநியோகிக்கப்படும் தகவல்கள் விரைவு விநியோகமாகக் கொள்ளப்படும். விரைவு விநியோகத்திற்கு, சாதாரண விநியோகத்திற்கான கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

வன்னிப்பகுதி விநியோகங்கள் கண்டிவீதியை மையமாக வைத்தேவிநியோகிக்கப்படும். கிளிநொச்சி நகரத்திலிருந்து 3 மைல்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள பகுதிகளுக்கும் குஞ்சுப்பரந்தன் இறங்குதுறைப்பகுதிக்கும் விநியோகங்கள் மேற்கொள்ளப்படும்.

தொடர்பு தகவல்களை கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களை சரியான முறையில் பூர்த்திசெய்து அலுவலக நேரத்தில் ஒப்படைக்கலாம் என்றும், பொதுமக்கள் பயன்பெறும் நோக்குடன் இத்தகவல்கள் வெளியிடப்படுகிறது என்றும் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

தென்மராட்சிப் பகுதியில், கடந்த சில தினங்களாக சைக்கிள் திருட்டுகள் அதிகரித்து வருவதாக தெரியவருகின்றது.

## மகன் அடித்து தந்தை மரணம்

(தென்மராட்சி)

தந்தையை மகன் அடித்துக் கொலை செய்தார். கடந்த ஆறாம் திகதியன்று குஞ்சுப்பரந்தன் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது பன்னிரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா தியாகலிங்கம் (வயது60) என்பவருக்கும் அவரது மகனுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும், அதன் பின்னர் இரவு நேரம் நித்திரையில் வைத்து மகனை வெட்டிக் கொல்ல தகப்பன் முயற்சித்தார் எனவும், அச்சமயத்தில் நித்திரையில் இருந்த மகன் திடுக்கிட்டெழுந்து அருகிலிருந்த உலக்கையால் தாக்கியதில் தந்தைக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் போது அவர் மரணமடைந்தார் எனவும் கூறப்படுகின்றது. இது தொடர்பாக கிளிநொச்சி காவல் துறையினர் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (86)

## பதவி உயர்வும் இடமாற்றமும்

யாழ் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகக் கடமையாற்றிய ஆசிரியர் பாலசுந்தரம் யாழ் புனித றோக்ஸ் றோ. க. வித்தியாலயத்திற்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் அவருக்கான சேவை நலன் பாராட்டு விழா கடந்த செவ்வாயன்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு:
13. 08. 1969

வீரச்சாவு:
14. 06. 1991

**வீரவேங்கை ஜீவமலர்**
(செல்வி ஸ்ரீதுளசி கணேசசுந்தரன்)

செல்வமகளாகி ஜீவமலராகி
தியாக மலரான தெய்வமகளே..
உனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் ஆறாத பிரிவுத்துயருடன்
அன்பு அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்.

36A. அரச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(5138)

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-14

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி-திருவையாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது நிகழ்ந்த எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தம்பா/சூட்டி** (இராமசாமி சங்கரப்பிள்ளை -தர்மபுரம் - கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட முல்லைத்தீவு - முள்ளியவளையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1987ஆம் ஆண்டு யாழ் - குரும்பசிட்டியில் மினிமுகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரச்சாவெய்திய-

**குமரிநாடன்** (சிறிரங்கன் விஜயபாலன் - ராஜபுரம்- முழங்காவில் - மன்னார்)

**லெப். மதி** (இராசையா சிறிபத்மநாதன்- செக்காலை ஒழுங்கை, மானிப்பாய் வடக்கு, யாழ். )

**2-ம் லெப். வின்சன்** (தியாகராசா ஞானகுமார்- வின்சன் வீதி, சங்கரன் தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி - யாழ். )

**காமினி** (பீற்றர் செல்வராஜ்-சிவகுமார்கடை, டிப்போ வீதி, கிளிநொச்சி)

**சர்வா** (சுப்பையா குகனேஸ்வரன்-173, யோகபுரம்- கிளிநொச்சி)

**முகமட்** (ஐயாத்துரை குமாரதாசன்—ஹட்சன் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**வதனன்** ( --வட்டக்கச்சி - கிளிநொச்சி)

திருமலை-3ம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**முருகதாஸ்** (பஞ்சலிங்கம் புஸ்பாகரன்-சாம்பல்தீவு- திருமலை)

**அர்ச்சுன்** (--ஓட்டமாவடி-மட்டு)

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**ரகுவரன்** (வேலு முருகேசு இசைமாலைத்தாழ்வு, முருங்கன்-மன்னார்)

**லெப்.ரஞ்சன்** (பொ. சண்முகநாதன் -சன்னாசிப்பரந்தன் -கிளிநொச்சி)

இதே தினம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**கலையன்** (...

**தேவன்/வெள்ளை** (...

மாவட்ட பொருளியல் மேம் பாட்டு இணைப்பாளர் திரு. கௌரி, தீவக மகளிர் அமைப்பைச் சேர்ந்த தமிழ்நங்கை ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

### நிர்வாகிகள் தெரிவு
(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விக் கோட்ட அதிபர் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் கடந்த பத்தாந்திகதி யா/சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் புதிய நிர்வாகசபை 11 உறுப்பினர்களுள் தலைவராக எஸ். துரைராசா, செயலாளராக ஐ வரதராசா, பொருளாளராக, சி வேலாயுத பிள்ளை ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் இச்சபையின் நடைமுறைகள் பற்றி தென்மராட்சி கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு.பொ. வீரபத்திரன் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

### ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்
(பருத்தித்துறை)

தும்பளை திருவள்ளுவர் சன சமூக நிலைய தமிழ்மொழி மாணவர் மன்ற 2வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் சனசமூக நிலையத் தலைவர் திரு ந. நடராசா தலைமையில நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதர் குத்து விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். இளைப்பாறிய அதிபர் திரு. ம. சின்னையா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். நெல்லண்டை அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள் மலர் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார் பல பிரமுகர்களின் உரையை யடுத்து நிலையச் செயலாளர் நன்றியுரை நிகழ்த்தினார். (25)

### மெய்வல்லுநர் போட்டி

அராலி வளளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி 16-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாசாலை அதிபர் திரு. ஆ த. ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராக் கலந்து கொள்வார்.

வட்டுககோட்டை கொத்தணி அதிபர் திரு சி. டாஸ், தமிழீழ கடற்புலிகள் அராலி பிரதேசப்பொறுப்பாளர் திரு. தி. பாலகுமார், பண்டத்தரிப்பு கல்வி அபிவிருத்திக்கழக இணைப்பாளர் திரு. கலாநேசன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.



வீரச்சாவு:
14. 06. 1991

## வீரவேங்கை ஜீவமலர்
(செல்வி ஸ்ரீதுளசி கணேசசுந்தரன்)


செல்வமகளாகி ஜீவமலராகி
தியாக மலரான தெய்வமகளே..
உனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் ஆறாத பிரிவுத்துயருடன்
அன்பு அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்.

36A. அரச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(5138)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



### லெப். ரவி
(குமாரசாமி சாந்திக்குமார்)
(சார்ள்ஸ் அன்ரனி விசேட அதிரடிப்படைப் பிரிவு)

தாயின் மடியில்: 30-11-1972
தாயக விடிவில்: 14-06-1991

சாந்தமான உன் முகமும், வீரமான உன்னுடலும் தமிழீழ மண்ணின் விதையானதோ, கடலலை வற்றினாலும் எம் கண்ணீர் அலை வற்றாது. இவருடன் சங்கமித்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

சாந்திக்குமார் வீதி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

- குடும்பத்தினர்

(5134)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-06-14

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி-திருவையாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது நிகழ்ந்த எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தம்பா/சூட்டி** (இராமசாமி சங்கரப்பிள்ளை - தர்மபுரம் - கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட முல்லைத்தீவு - முள்ளியவளையைச் சேர்ந்த தமிழ்ப்பொது மகன்.

1987ஆம் ஆண்டு யாழ் - குரும்பசிட்டியில் மினி முகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரச்சாவெய்திய-

**குமரிநாடன்** (சிறிரங்கன் விஜயபாலன் - ராஜபுரம்- முழங்காவில் - மன்னார்)

**லெப். மதி** (இராசையா சிறிபத்மநாதன்- செக்காலை ஒழுங்கை, மானிப்பாய் வடக்கு, யாழ்.)

**2-ம் லெப். வின்சன்** (தியாகராசா ஞானகுமார்- வின்சன் வீதி, சங்கரன் தோட்டம், கரணவாய் தெற்கு - கரவெட்டி - யாழ்.)

**தேவன்/வெள்ளை** (சற்குணராசா தேவராசா- மதவடி, வடலியடைப்பு, சங்கானை மேற்கு - யாழ்.)

**மஜீத்** (வரதராசா மங்களேஸ்வரன் - பொன்னாலை தெற்கு, சுழிபுரம்- யாழ்)

**சிக்கந்தன்** (சின்னத்தம்பி சேனாதிராசா பாஸ்கரன்- பாஸ்கரன் வீதி, கொக்குவில் கிழக்கு-யாழ்)

வடமராட்சிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ''ஒப்பறேசன் லிபறேசன்'' நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பூசாமுகாமில் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட இதே பகுதியைச் சேர்ந்த 12 தமிழ் இளைஞர்கள்

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். தாஸ்** (செல்லப்பு விக்கினேஸ்வரன்- 142, உருத்திரபுரம் - கிளிநொச்சி)

கிளிநொச்சி - பழையமுறிகண்டிப் பகுதியில் இந்தியப்படையினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். கதிரவன்** (கோவிந்து தேவராசா -குமரபுரம், பரந்தன் - கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு மட்டு - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாககுதலின் போது வீரச்சாவெய்திய-

**லெப். சுதர்சன்** (சிவலிங்கம் ரவீந்திரன் - கிரான் - மட்டு)

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**குரே** (.........)

மாங்குளம் சிறிலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் கஜன்** (தியாகராசா பொன்னம்பலம் -மாமடு, நெடுங்கேணி - மணலாறு)

**லோலோ** (செல்லத்துரை சிவதாசன் - பெரியகுளம் - நெடுங்கேணி - மணலாறு)

**மேஜர் சிங்கன்** (இராசையா மகேந்திரன் - 4-வட்டாரம், புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு)

**சிறி** (சுப்பிரமணியம் வரதன்-முள்ளியவளை-முல்லைத்தீவு

**சசி/சிறி** (வல்லிபுரம் குணபாலசிங்கம்-ஒட்டிசுட்டான்- -முள்ளியவளை)

**மகான்** (செல்லத்துரைசிவகுமார்-கனகன்குளம், செட்டிக்குளம்-வவுனியா)

**சுரேன்** (கந்தையா சிவபாலன்-துடரிக்குளம் வீதி, செட்டிக்குளம்-வவுனியா)

**கப்டன் பனா** (தம்பிஐயா சசீந்திரன்-புகையிரத நிலைய வீதி,-கிளிநொச்சி)

**காமினி** (பீற்றர் செல்வராஜ்-சிவகுமார்கடை, டிப்போ வீதி, கிளிநொச்சி)

**சர்வா** (சுப்பையா குகனேஸ்வரன்-173, யோகபுரம்- கிளிநொச்சி)

**முகமட்** (ஐயாத்துரை குமாரதாசன்—ஹட்சன் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**வதனன்** ( --வட்டக்கச்சி - கிளிநொச்சி)

திருமலை-3ம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**முருகதாஸ்** (பஞ்சலிங்கம் புஸ்பாகரன்-சாம்பல்தீவு- திருமலை)

**அர்ச்சுன்** (--ஒட்டமாவடி-மட்டு)

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**ரகுவரன்** (வேலு முருகேசு இசைமாலைத்தாழ்வு, முருங்கன்-மன்னார்)

**லெப்.ரஞ்சன்** (பொ. சண்முகநாதன்-சன்னாசிப்பரந்தன்-கிளிநொச்சி)

இதே தினம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**கலையன்** (கச்சுமுகமது அபுல்கஸன்-1-ம்வட்டாரம், புல்மோட்டை-திருமலை)

திருமலை-கிண்ணியாப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**தேவா** (ஞானப்பிரகாசம் விக்கினேஸ்வரன் சிப்பித்திடல், தம்பலகமம்-திருமலை)

**அன்ரன்** (இ.வசந்தகுமார் - முள்ளிப்பொத்தானை- மட்டு)

இதே தினம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**நளன்** (தியாகராகா உதயகாந்தன்-கொக்குத்தொடுவாய்-மணலாறு)

1991ஆம் ஆண்டு வவுனியா-பூவரசங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய)

**பிறேமன்** (திசைவீரசிங்கம் தவேந்திரன்-கனகராயன் குளம்-வவுனியா)

**ராஜின்** (பொன்னுத்துரை கிரிதரன்-அருள்வீதி, நாவற்குழி, கைதடி-யாழ்)

**லெப்.ரவி** (குமாரசாமி சாந்திக்குமார்-சாந்திக்குமார் வீதி, துன்னாலைவடக்கு-கரவெட்டி யாழ்)

வவுனியா-செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.வசுமதி** (தவநாயகி இராசநாயகம்- கற்சிலைமடு- ஒட்டிசுட்டான்)

**கப்டன் சுஜாத்தா** (அனுசியா யோகராசா - ''தர்மவாசம்'' அல்வாய் மேற்கு, திக்கம். பருத்தித்துறை - யாழ்.)

**லெப் ஜெயசீலி** (தர்சினி சுந்தரலிங்கம் - கடற்கரை வீதி, ராதா விசன்சென்ரர், பருத்தித்துறை - யாழ்.)

**2-ம் லெப். அருணா** [தவமணி சின்னையா- கொடிகாமம் வீதி, புலோலி தெற்கு. பருத்தித்துறை - யாழ்]

**ஜீவமலர்** (சிறிதுளசி கணேசசுந்தரம் - 36ஏ, அரசடி வீதி, நல்லூர் - யாழ்.)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட செங்கலடி 2ஐச் சேர்ந்த குழந்தை, வந்தாறுமூலை லேக்கவுஸ் வீதியைச் சேர்ந்த சிறுவன், மாவடிவேம்பைச் சேர்ந்த இளைஞன் ஆகிய 03 தமிழர்கள். வாழைச்சேனை - நாசியன் பகுதியில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.


ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**


(சி/6831)




# எமது வீர வணக்கங்கள்



லெப்.கேணல் புலேந்திரன் (சாள்ஸ்)



ங்
க
ள்



## லெப்.கேணல் புலேந்திரன் (சாள்ஸ்)

**ஆனந்தராசா தவராசா**

திருக்கடலூர் திருமலை

**11. 06. 93 அன்று கிளாலிக் கடற்பரப்பில்**
**சிறிலங்கா கடற்படையுடன் ஏற்பட்ட நேரடி மோதலில்**
**வீரச்சாவு**

தொடரும் களங்கள்
உமது நினைவாய்
விடியும் துயரம்
உமது ஒளியால்



## லெப். மகான்

**நவரட்ணம் தவராசா**

சாளம்பைக்குளம், வவுனியா.

# விடுதலைப் புலிகளின் - கடற் புலிகள்

# ஒருமாத ஆட்சியும் டி. பி. விஜயதுங்காவும்; நெருக்கடியின் மத்தியில் புதிய ஜனாதிபதி!

**இளையவன்**

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் மறைவுக்கு சிறிலங்காப் பாராளுமன்ற வரலாற்றில் முதன் முறையாக அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை கடந்த செவ்வாயன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அனுதாப உரைகள் நிகழ்த்துவதற்கென இரு தினங்கள் ஒதுக்கப்பட்ட போதும் பின்னர் செவ்வாயன்று பாராளுமன்ற கூட்ட நேரம் திட்டமிட்டதற்கு மேலாகவும் நீடிக்கப்பட்டு அன்றைய தினமே அனுதாபப் பிரேரணை நிறைவேற்றப் பட்டது. பாராளுமன்றத்தில் அனுதாபப் பிரேரணை ஒன்று நிறைவேற்றப் படும்போது சம்பந்தப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பொது மக்கள் கலரியில் வீற்றிருப்பது வழக்கம். ஆனால் முன்னாள் ஜனாதிபதியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்ட போதோ அல்லது அனுதாப உரைகள் இடம்பெற்ற போதோ. பிரேமதாசாவின் குடும்ப உறுப்பினர்கள் எவரும் சபையின் கலரிகளில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரேமதாசாவைக் கொன்றவர்கள் யார் என்ற கேள்வியை எழுப்பியபாராளுமன்ற பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா அவரை மோசமாக விமர்சித்த எழுத்தாளர்கள் மீதும் குற்றம் கண்டார். ஆபிரகாம் லிங்கன், கென்னடி மகாத்மா காந்தி, பண்டாரநாயக்க போன்றோரின் வரிசையில் பிரேமதாசாவும் சேர்க்கப்பட்டு விட்டதாக அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

''அரசியல் வாழ்க்கையில் என்னுடன் தீவிரமாக மோதியவர் பிரேமதாசா எனினும் சுகவீனம் அடைந்திருந்த போது என்னை நேரில் வந்து பார்த்து ஆறுதல் கூறினார்'' என்று திருமதி சிறிமாவோ எடுத்துரைத்தார்.

நோயுற்றவர்களுக்கு உதவும் முகமாக தாங்கள் சிபார்சு செய்தபோதெல்லாம் ஜனாதிபதி நிதியிலிருந்து தாராளமாக உதவியவர் ஜனாதிபதி பிரேமதாசா என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தினேஷ் குணவர்த்தனா சுட்டிக்காட்டிக்கு பின்னர் பதவியேற்ற டி. பி. விஜயதுங்காவின் ஒரு மாத ஆட்சிபற்றி மீட்டுப் பார்ப்பது பொருத்தமானது. ''அமைச்சர்களுக்கு மீண்டும் அதிகாரங்கள், பணத்தை வீண்விரயம் செய்யும் ஆடம்பரங்களைக் கைவிடல், ஒளி—ஒலி பரப்புக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் பத்திரிகைகளுக்கு கூடுதல் சுதந்திரம், அரசாங்க கட்டுப்பாட்டிலிருக்கும் ஏரிக்கரை பத்திரிகைகளில் எதிரணிச் செய்திகளுக்கும் இட ஒதுக்கீடு, என்பவற்றின் மூலம் பிரேமதாசாவை விட வித்தியாசமானவர் தான் என்பதை விஜயதுங்க வெளிப்படுத்தியிருக்கின்றார்'' என்கிறார் பிரபல பத்திரிகையாளரான விக்டர் ஐவன். அத்துடன் ''பிரேமதாசாவின் ஆதரவாளர்களான அரசாங்க அதிகாரிகள் பதவி மாற்றம் செய்யப்பட்டிருப்பதால் பிரேமதாசாவின் குடும்பத்தினர் ஜனாதிபதி விஜயதுங்க மீது அதிருப்தி கொண்டுள்ளது'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விஜயதுங்க மேற்கொள்ளும் நிர்வாக சீர்திருத்தங்களை ''டி.பியின் பெரஸ்துரோய்க்கா'' என்று வர்ணிக்கும் ஆளுங்கட்சியின் முக்கியத்தர்கள் சிலர் பிரேமதாசாவின் கொள்கைகளுக்கு துரோகமிழைக்கப்படுவதாகவே கருதுகின்றனர். ஐ தே. கவின் செயலாளரான சிறிசேனகூரே செயற்குழுக் கூட்டத்தில் பேசும்போது ஐ. தே கவின் நிர்வாகம் மாற்றப்படுவதற்கு முன்பாக பிரேமதாசா இழைத்த தவறு என்ன என்பதை சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் டி.பி. செய்யும் மாற்றங்களை பிரேமதாசா மீது ''அரசியல் குற்ற விசாரணை'' கோரும் பிரேரணையை கொண்டு வர முனைந்த சக்திகள் வரவேற்கின்றன.

ஐ.தே.கவின் தலைமையில் திடீரென ஏற்பட்ட பெரும் மாற்றம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரை குறிப்பாக காமினி திசாநாயக்காவை தடுமாறச் செய்துள்ளது என்பது கொழும்புச்

பிரேமதாசாவை விடவும் வித்தியாசமானவர் என்பதை விஜயதுங்க நிரூபித்து இருக்கும் முறை பற்றி மக்கள் ஐக்கிய முன்னணியின் தினேஷ் குணவர்த்தனா விமர்சித்துள்ளார். வெரித்தாஸ் வானொலிக்கு பேட்டியளித்த தினேஷ் குணவர்த்தனா, விஜய துங்க செயற்படும் முறையைப் பார்த்தால் பிரேமதாசாவே பரவாயில்லை என்று எண்ண வைக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதிகளானஜே. ஆர். ஜெயவர்த்தனாவோ, பிரேமதாசாவோ நிதி அமைச்சையும் தமது பொறுப்பில் வைத்திருக்கவில்லை. ஆனால் விஜயதுங்கவோ நிதி அமைச்சையும் கூட தமது பொறுப்பிலேயே வைத்துக் கொண்டிருக்கிறார். என்பதையும், வடமேல் மற்றும் தென் மாகாண சபைகளின் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட விதத்தையும் தினேஷ் குணவர்த்தனா சுட்டிக் காட்டியுள்ளார்.

வடமேல்மாகாணசபையிலும் தென் மாகாண சபையிலும் ஐ.தே.க தெளிவான பெரும்பான்மையைக் கொண்டிருக்காத போதும் ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பம் அக்கட்சிகளுக்கு வழங்கப்பட்டிருப்பது ஜனநாயக விரோதமானது என்று எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன. கடந்த காலங்களில் தேர்தல்களில் மோசடிகள் இடம் பெற்றன என்றாலும் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னால் அதிகாரம் வழங்குவது மறுக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அதற்கான மோசமான முன்னுதாரணத்தை ஆட்சிப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே விஜயதுங்க வழங்கியிருக்கிறார் என்றும் அவை மேலும் சுட்டிக்காட்டுகின்றன இந்த இரு மாகாணசபைகளினதும் ஆட்சிப் பொறுப்பு யாருக்கு என்ற விவகாரம் இப்போது நீதிமன்றம் வரை சென்றுவிட்டது என்பதும், பாகிஸ்தானில் நவாப்ஷெரீப் ஆட்சிக்கு மீண்டதைப்போல ஆட்சி பொறுப்பு வழங்கப்படுவதில் நீதிமன்றம் சரியாகச் செயல்படாவிட்டால் கிளர்ச்சி

வர் பி. பி. திசாநாயக்காவின் அமைச்சரவை நியமனம் தொடர்பாகஇ தொ.காவிற்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது. கல்வி அமைச்சு பொறுப்பை தன்வசம் வைத்துக்கொண்ட முதல்வர் இ தொ. காவின் உறுப்பினர் சதாசிவத்திற்கு தோட்டப் பாட சாலைகளின் நிர்வாகம் என்பதை பிரித்து வழங்கினார் அத்துடன் முஸ்லிம் பாடசாலைகளின் நிர்வாகத்திற்காக எம்.எம்.ஏ ஹலீம் நியமிக்கப்பட்டார். ஆனால் கல்வி அமைச்சுப் பொறுப்பு முழுமையாக சதாசிவத்திடம் விடப்பட வேண்டும் என்று இ,தொ.கா வலியுறுத்தியது இதன் விளைவாக கடந்த மே 30-ம் திகதியன்று மத்திய மாகாண சபையின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட வைபவத்தில் அமைச்சரவைப் பொறுப்பேற்க சதாசிவம் மறுத்து விட்டார் முதல்வரோடும் ஏனைய அமைச்சர்களோடும் இணைந்து புகைப்படத்திற்கு 'போஸ்' கொடுக்கவே மறுத்துவிட்ட சதாசிவம் ஏனைய இ தொ.கா உறுப்பினர்களுடன் பின்னர் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார் அதில் இ.தொகாவிற்கு கல்வி அமைச்சு முழுமையாக வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தித்தெரிவித்ததுடன் இது விடயம் தலைவர் தொண்டமான் ஊடாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் எனவும் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையில் ஆளுங்கட்சிக்கு மொத்தம் 24 இடமும் எதிர்க்கட்சிகளுக்கு 21 இடமும் இருப்பதால் இ தொ. காவின் ஆதரவை ஐ தே.க புறக்கணித்து ஆட்சி நடத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொண்டமான் பேச்சுநடாத்தியபோதும் அவ்விவகாரம் தீர்வுக்கு வரவில்லை என்று இ. தொ. கா வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதேவேளை கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களை உள்ளடக்கிய சப்பிரகமுவா மாகாணத்திலும் கூட நிலைமை சுமுகமாக இல்லை. விருப்பு வாக்குகளின் அடிப்ப

னாள் அமைச்சர் சந்திரா சங்கத்த சபாநாயகராக தெரிவு செய்யப்படுவதற்கு ஆதரவு காட்டலாம் என்று கூறப்படுகின்றது இதேபோல ஊவா மாகாண சபையிலும் கூட இ.தொ.காவுக்கும்ஐ.தே கவுக்கும்இடையிலானஉறவுகள்திருப்திகரமானதாக இல்லை என்றே தெரிய வருகின்றது.

''இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பின் பயனை அனுபவிக்கும் சில அமைச்சர்கள் இந்தியத் தொழிலாளர்களின் நிலையையும், அபிலாசைகளையும் உணருவதாக இல்லை'' என்று அமைச்சர் தொண்டமான் சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டியில் கவலையுடன் குறிப்பிட்டிருக்கிறார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது

ஆகவிஜயதுங்கவின் ஒரு மாத ஆட்சி என்பது ஐ.தே.கவினுள்ளும் அதன்கூட்டணிக் கட்சியோடும் உறவுகளில் பலத்தவிரிசல்களைத் தோற்றுவித்திருக்கின்றது என்பது வெளிப்படை. இதே அடிப்படையில் பிரேமதாசாவிற்கு நெருக்கமானவர்கள் என்று கூறப்படுபவர்கள் இப்போது தமது எதிர்ப்புகளைக் காட்டத் தொடங்கியுள்ளனர். திருமதிஹேமாவை அரசியலில் முன்னுக்கு கொண்டுவருவதற்கு அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி போன்றோர் எடுத்த முயற்சிகள் விஜயதுங்காவின் சீர்திருத்தப் போக்குகளைமுழுமனதோடு ஆதரிப்போரால் முறியடிக்கப்பட்டிருப்பதாகவேதோன்றுகின்றது. ஐ தே கவின் இதேபோக்கு தொடருமானால் கட்சிக்குள் மேலும் ஒரு பிளவு தவிர்க்க முடியாததாகவேஇருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறாக ஐ தே. கவின் புதிய தலைமைத்துவமானது தென்னிலங்கையில் தனது தலைமையைத் தக்க வைத்துக் கொள்வதில் தடுமாறுகின்றது. இதனால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் நடைபெற்றுவரும் போர் தொடர்பாக உடனடியாக உறுதியான நிலைப்பாடு எதையும் மேற்கொள்ளும் என்று சொல்வதற்கில்லை என்று அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். எனவே விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை என்பதற்கு சந்தர்ப்பம் மிகக் குறைவாகவே இருப்பதாகவும்,



## 31-வது நாள் நினைவஞ்சலி



### திருமதி இராசமணி செல்லத்துரை

தோற்றம்: 1916-02-20 மறைவு: 1993-05-15

பெற்ற பிள்ளைகள் பெருமையுடன் வாழ்ந்திடவே
கற்ற வித்தையை வகையாகக் கையாண்டு
சற்றும் சளைக்காது சாடிவிட்ட சாதனையை
எண்ணி மலைக்கிறோம் - இறைவன்பால்
உன் ஆத்மா சார்ந்திடவே
இறைஞ்சுகின்றோம் இறைவன் தாளே.

வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[5121]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

(15-06-1993)

மலர்வு: 14 — 04 — 1902



உதிர்வு: 16 — 05 — 1993

கணபதிப்பிள்ளை

### சின்னாச்சிப்பிள்ளை

கருணையிற் கனிந்து வைதவர் வாழ்த்தி
மறச்செயல் தவிர்த்து ஐயமில் அன்பு
அறநெறி காத்து மெய்கண்ட மேனி
பொய்யென்று போயது!

அன்னாரின் ஈமக் கிரியையில் கலந்து கொண்

ஆபிரகாம் லிங்கன், கென்னடி, மகாத்மா காந்தி, பண்டாரநாயக்க போன்றோரின் வரிசையில் பிரேமதாசாவும் சேர்க்கப்பட்டு விட்டதாக அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

"அரசியல் வாழ்க்கையில் என்னுடன் தீவிரமாக மோதியவர் பிரேமதாசா எனினும் சுகவீனம் அடைந்திருந்த போது என்னை நேரில் வந்து பார்த்து ஆறுதல் கூறினார்" என்று திருமதி சிறிமாவோ எடுத்துரைத்தார்.

நோயுற்றவர்களுக்கு உதவும் முகமாக தாங்கள் சிபார்சு செய்தபோதெல்லாம் ஜனாதிபதி நிதியிலிருந்து தாராளமாக உதவியவர் ஜனாதிபதி பிரேமதாசா என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தினேஷ் குணவர்த்தனா சுட்டிக்காட்டினார்.

சோகம் மேலிட்ட நிலையில் விம்மி அழுதபடி எழுதி வந்த தமது உரையை வாசித்தார் அமைச்சர் சிறிசேனகூரே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்ட பிரேமதாசா நாட்டுக்கும் மக்களுக்கும் பணியாற்றவே அதிகாரத்தை விரும்பினார். பயன்படுத்தினார். கொள்கை ரீதியாக அவரை எதிர்த்தவர்கள் உலகின் முன்பாக பயங்கரமான ஒரு மனிதராக அவரைக் காட்ட முற்பட்டனர் என்றும், அவரது எதிர்பார்ப்புகள் போன்று அவர் விட்டுச்சென்ற பொறுப்புக்களை நிறைவேற்ற எம்மால் முடியுமா என்ற சந்தேகமும் ஏறபட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் பிரேமாவு மிழைக்கப்படுவதாகவே கருதுகின்றனர். ஐ தே. க வின் செயலாளரான சிறிசேனகூரே செயற்குழுக் கூட்டத்தில் பேசும்போது ஐ. தே கவின் நிர்வாகம் மாற்றப்படுவதற்கு முன்பாக பிரேமதாசா இழைத்த தவறு என்ன என்பதை சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆனால் டி.பி. செய்யும் மாற்றங்களை பிரேமதாசா மீது "அரசியல் குற்ற விசாரணை" கோரும் பிரேரணையை கொண்டு வர முனைந்த சக்திகள் வரவேற்கின்றன.

ஐ.தே.க வின் தலைமையில் திடீரென ஏற்பட்ட பெரும் மாற்றம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரை குறிப்பாக காமினி திசாநாயக்காவை தடுமாறச் செய்துள்ளது என்பது கொழும்புச் செய்திகளிலிருந்து தெரியவருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தாம் வெளியேறியதை நியாயம் என்று நிரூபிக்கக்கூடிய காரணம் வலுவிழந்து போயிருப்பதாக அவர் கருதுவதாகத் தெரிகின்றது லலித்தின் கொலைக்கு பிரேமாதான் காரணம் என்று சுமத்திய குற்றச்சாட்டும் கூட பிரேமாவின் கொலைக்குப் பின்னர் அர்த்தம் இழந்திருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆனாலும் பிரேமதாசாவின் அடிப்படைக் கொள்கைகள் பலவற்றோடு விஜயதுங்க உடன்பாடு கொண்டிருந்தவர் என்றும், அவற்றின் நிறைவேற்றத்திற்கு ஒத்துழைத்தவர் என்றும் காமினி திசாநாயக்கா சுட்டிக் காட்டுவதன் மூலம் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தி வருகிறார்.

எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன. கடந்த காலங்களில் தேர்தல்களில் மோசடிகள் இடம் பெற்றன என்றாலும் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னால் அதிகாரம் வழங்குவது மறுக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அதற்கான மோசமான முன்னுதாரணத்தை ஆட்சிப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே விஜயதுங்க வழங்கியிருக்கிறார் என்றும் அவை மேலும் சுட்டிக்காட்டுகின்றன இந்த இரு மாகாணசபைகளினதும் ஆட்சிப் பொறுப்பு யாருக்கு என்ற விவகாரம் இப்போது நீதிமன்றம் வரை சென்றுவிட்டது என்பதும், பாகிஸ்தானில் நவாப்ஷெரீப் ஆட்சிக்கு மீண்டதைப்போல ஆட்சி பொறுப்பு வழங்கப்படுவதில் நீதிமன்றம் சரியாகச் செயல்படாவிட்டால் கிளர்ச்சி மேலும் தீவிரமாகும் என்றும் திருமதி சிறிமாவோ சவால் விட்டிருக்கிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேல் மாகாணசபையை பொதுமக்கள் முன்னணியிடம் கோட்டைவிட்ட ஐ தே.கவட மேல் மாகாசணபையையும். தென்மாகாணசபையையும் சர்ச்சைக்குரிய வகையில் கைப்பற்றிக் கொண்டது மாகாண சபைத் தேர்தல்களின் போது ஐ.தே.க வின் வெற்றிக்கு பெரும் துணையாக மலையக மாகாணங்களே இருந்தன. ஆனால் மலையக மாகாணங்களிலும் கூட ஐ.தே.க நிம்மதிப் பெருமூச்சை இழுத்து விடமுடியவிலலை.

மத்திய மாகாணசபையில் ஐ தே கட்சிக்கு 24 இடங்களில் 11 இ தொ.கா வினுடையதாகும். மத்தியமாகாண முதல்ணத்திற்கு கொண்டு செல்லப்படும் எனவும் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையில் ஆளுங்கட்சிக்கு மொத்தம் 24 இடமும் எதிர்க்கட்சிகளுக்கு 21 இடமும் இருப்பதால் இ தொ. காவின் ஆதரவை ஐ.தே.க புறக்கணித்து ஆட்சி நடத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொண்டமான் பேச்சுநடாத்தியபோதும் அவ்விவகாரம் தீர்வுக்கு வரவில்லை என்று இ. தொ. கா வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதேவேளை கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களை உள்ளடக்கிய சப்பிரகமுவா மாகாணத்திலும் கூட நிலைமை சுமுகமாக இல்லை. விருப்பு வாக்குகளின் அடிப்படையிலேயே அமைச்சரவை நியமனங்கள் இடம் பெறும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதி உறுதியாகப்பின்பற்றப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. மாகாணத்தின் முன்னாள் கல்வி அமைச்சர் ஆர். எம் ரஞ்சித் தலைமையில் ஒரு குழு அண்மையில் ஜனாதிபதி விஜயதுங்காவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளஅதேவேளை மாகாண முதல்வர் புஞ்சி நிலமே தலைமையிலான குழுவினர் இக்குழுவின் நடவடிக்கைகளை எதிர்த்து வருகின்றனர். முதல்வர் சபையின் சபாநாயகர் பதவியை இ. தொ. கா விற்கு ஒதுக்க முற்பட்டிருக்கும் அதே வேளை முன்னாள் அமைச்சர் ரஞ்சித் தலைமையிலான குழுவினர் ஜனநாயகஐககிய தேசிய முன்னணியை சேர்ந்த முன் கவேதோன்றுகின்றது. ஐ தே கவின் இதேபோக்கு தொடருமானால் கட்சிக்குள் மேலும் ஒரு பிளவு தவிர்க்க முடியாததாகவேஇருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறாக ஐ தே. கவின் புதிய தலைமைத்துவமானது தென்னிலங்கையில் தனது தலைமையைத் தக்க வைத்துக் கொள்வதில் தடுமாறுகின்றது. இதனால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் நடைபெற்றுவரும் போர் தொடர்பாக உடனடியாக உறுதியான நிலைப்பாடு எதையும் மேற்கொள்ளும் என்று சொல்வதற்கில்லை என்று அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். எனவே விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை என்பதற்கு சந்தர்ப்பம் மிகக் குறைவாகவே இருப்பதாகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதிலேயே விஜயதுங்கா நாட்டம் கொள்ளக்கூடும் என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். இதேவேளை வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் அரசு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் மிக நெருங்கிய சகாவான வீரசிங்க மல்லிமாராய்ச்சிபாராளுமன்றத்தில் நிகழ்த்திய அனுதாப உரையில் "இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் மூலம் மறைந்த ஜனாதிபதிக்குக் கைம்மாறு செய்யலாம்" என்று குறிப்பிட்டிருப்பது வழமைபோல பாராளுமன்றப் பதிவேடுகளில் தூங்கும் எனலாம்.



மலர்வு: 14 — 04 — 1902

உதிர்வு: 16 — 05 — 1993

கணபதிப்பிள்ளை

## சின்னாச்சிப்பிள்ளை

கருணையிற் கனிந்து வைதவர் வாழ்த்தி
மறச்செயல் தவிர்த்து ஐயமில் அன்பு
அறநெறி காத்து மெய்கண்ட மேனி
பொய்யென்று போயது!

அன்னாரின் ஈமக் கிரியையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர் மற்றும் யாவருக்கும் நாளை 15-06-1993இல் அவருடைய இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்.

அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்

அம்மன் கோயில் வீதி, தகவல்: க பொன்னுச்சாமி
கரணவாய் தெற்கு. (முன்னாள் இ. போ. ச. ஊழியர்)
கரவெட்டி. (5109) (மகன்)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



## 2-ம் லெப். அருணா

[சின்னையா நவமணி]

சந்ததி வரிசையில்: 1969-02-17

சாதனை வரிசையில்: 1991-06-14

தென்புலோலி மண்மீது தவழ்ந்து விளையாடி
அன்புடனே எமையன்று அகம்மகிழ வைத்தாய்
சொந்தமண் பறிபோகும் நிலைகண்டு நீயும்
இன்புடன் புலியாக மாறிப் போரிட்டாய்
வவுனியா மண்மீது அரச படையோடு
நேருக்கு நேர்நின்று போரிட்டு மாண்டாய்
தமிழீழம் உனையென்றும் மறக்காது அம்மா
தமிழீழத் தாயவளின் மருங்கில்நீ வாழ்வாய்.

கொடிகாமம் வீதி, — குடும்பத்தினர்
புலோலி தெற்கு. (சி-6827)

# உறவுப்பாலமாக புதியஆயர் செயற்பட வேண்டும்

## ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். பேராலய புதிய ஆயர் அதி. வணக்கத்துக்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களின் பதவி ஏற்பு விழா நேற்று முன்தினம் சிறப்புற நடைபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் உள்ளக மைதானத்தில் இவ்விழா நடைபெற்றது.

மாலை 3.00 மணியளவில் வட்டுக்கோட்டை பேராலயத்தில் மூன்றாவது பேராயராக பதவியில் அமர்த்தும் நிகழ்வுக்கான வழிபாடு பேராயர் ஜெயரட்ணம் அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து புதியபேராயரை வரவேற்கும் நிகழ்வு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

இந்த வரவேற்புநிகழ்வுக்கும் ஆண்டகை அம்பலவாணர் தலைமை தாங்கினார்.

இவ்வைபவத்தில் பல்வேறு பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். கத்தோலிக்க திருச்சபையின் யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் பேசும்போது தென்னிந்தியத் திருச்சபைக்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் இடையில் நீண்டகாலமாக தொடர்புகள் இருந்து வருகின்றன. இவ்வாறான தொடர்புகளை தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்காக தற்பொழுது பதவி ஏற்றுள்ள புதிய ஆயர் ஓர் உறவுப்பாலமாக செயற்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும் இப்புதிய ஆயர் ஞானமும் அறிவும் பெற்றவர் மாத்திரமல்ல இறைபக்தியும் கொண்டவர். இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கை கொண்டவர் இவற்றினைக் கொண்டு மக்களை வழிநடத்துவார் என்று நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்என்று தெரிவித்தார்.

தொடர்ந்து புதிய ஆயரது கடந்தகால வாழ்க்கை வரலாறுகளையும், அவரது அரும்பணிகள் குறித்தும், இதுவரை திருச்சபைக்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவைகள் குறித்தும் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி செல்லையா காலவரையறைகளைக் குறிப்பிட்டு உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பேசும்போது தமிழகத்தில் திருநிலைப் படுத்தப்பட்ட கலாநிதி ஜெபநேசன் பேராயராக தமது பதவி ஏற்கும் இன்றைய தினம் ஒரு வரலாற்றுச் சிறப்புடைய தினமாகும் என்றும் தென்னிந்தியத் திருச்சபை கடந்த காலத்தில் தமது சமயம் சார்ந்த ஆத்மீக கடமைக்கு மேலாக காலத்தின் தேவையை உணர்ந்து பரந்த அளவில் மக்களுக்கு ஆற்றி வரும் பணி மகத்தானது. இப்பணி தொடர வேண்டும் என்றே நான் எதிர்பார்க்கின்றேன் என்றார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பேசும்போது 'எமது மக்கள் இன்று யுத்த நெருக்கடிக்குள்ளும் பொருளாதார தடைகளுககு மத்தியிலும் பெரும் பாதிப்புக்குட்பட்டு வாழ்ந்து வரும் இக்காலகட்டத்தில் இம்மக்கள் மனவலிமையும், விடாமுயற்சியும் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். புதிய ஆயர் கலாநிதி ஜெபநேசன் அவர்கள் மனிதநேயம் மிக்க. அறிவியல்நிறைந்த, மக்கள் பண்புகளைமதிக்கும் எப்பொழுதும் ஆழ்ந்த பார்வை கொண்ட ஒருவராக இருக்கிறார். இதனால் இப்புதிய திருப்பம் ஏற்படும் என்றும் இத்திருப்பம் எங்கள் ஒவ்வொருவரது வளர்ச்சிக்கும், விடிவிற்கும் வழிவகுக்கும் என்றும் எனவே இப்புதிய ஆயரை எமது இயக்கத்தின் சார்பில் வரவேற்கின்றேன்' என்றும் கூறினார்.

தொடர்ந்து டாக்டர் ஜெயக்குலராஜா உட்பட மேலும் பல பிரமுகர்கள் உரை நிகழ்த்தினார்கள். தொடர்ந்து புதியஆயர் உரையாற்றும் போது அனைவருக்கும் நன்றி தெரிவித்தும் தனது பணியை இயன்றவரை செயலாற்றுவதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் கோரினார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் பல இடம்பெற்றன.

சிந்தனைக்கு

கவிதை படைப்பதைப் போலவே, கழனி உழுவதிலும் கண்ணியம் உள்ளது என்பதை உணராத இனம் எதுவும், உயராது.

- புக்கர் டி. வாஷிங்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## கட்டாய ராணுவ சேவை

சிங்கள அரசியற் கட்சிகள் மத்தியில் ஒரு விடயத்தில் மட்டும் ஒற்றுமை உண்டு. கொள்கை வேறுபாடுகள், கட்சி வேறுபாடுகள், உட்கட்சி மோதல்கள் என்று எது இருப்பினும், தமிழருக்கு எதிரான விடயத்தில் மட்டும் அவர்கள் தமக்குள் முரண்பட்டுக் கொள்வதில்லை. மாறாக, முரண்பாடுகளை மறந்து அந்நியோன்யத்தை வெளிப்படுத்துவார்கள்.

இந்த வரிசையில், தற்பொழுது சிங்கள இளைஞர்களுக்கு கட்டாய இராணுவ சேவை அளிக்கும் மசோதா பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இம்மசோதாவைக் கொண்டு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் இது குறித்து ஆளும் கட்சியினருக்கு விளக்கம் அளித்ததாகவும், ஆளும் கட்சியினர் ஒரு சில திருத்தங்களைச் சுட்டிக் காட்டியதோடு மசோதாவை ஏற்றும் கொண்டனர்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் கொண்டு வரும் ஒரு மசோதா சிறிலங்கா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதென்பது சாதாரண விடயமல்ல. இந்நிலையில் நிறைவேறிய இச்சட்ட மூலத்தை சிங்கள அரசாங்கம் 'ஜனநாயகப் பாரம்பரியம்' எனப் பறைசாற்ற முற்படலாம். ஆனால், இது உண்மையில் சிங்களப் பேரினவாதிகளின் இனவாதத்தின் வெளிப்பாடு என்பதோடு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் தந்திரமும் ஆகும்,

எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலையில் ஐ. தே. கட்சி சுமத்தியதோ, அஃதபோன்று தனது அவசிய தேவை ஒன்றை சு. கட்சியின் மசோதா மூலம் ஐ. தே. கட்சி நிறைவேற்றுவதற்கு முடிவு செய்துள்ளது, அதாவது, கட்டாய இராணுவ சேவையால் உருவாகும் பாதகமான விளைவுகளுக்கு சு. கட்சிபொறுப்பேற்க,சாதகமான விடயங்களை ஆளும் கட்சி பயன்படுத்த முற்படுகின்றது.

இதேவேளை, இம்மசோதா இரண்டு வருடங்களுக்கு முன்னர் சுதந்திரக் கட்சி எம். பி. ஒருவரால் கொண்டு வரப்பட்டாலும், அன்று ...

# பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு எதிராகப் போராடுவேன்

## -அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

அமைச்சர் நியமனங்கள் செய்யும்போது விகிதாசார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றுமாறு அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார். அதேவேளை பாராளுமன்ற ஆட்சிமுறையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதை எதிர்க்கப்போவதாகவும் கூறியுள்ளார்.

அமைச்சர் எஸ். தொண்டமான் ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார். தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அண்மையில் நடந்த மாகாண சபைத் தேர்தல்களில் 4,00,000 வாக்குகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் தேர்வில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை பின்பற்றப்படும் பட்சத்தில் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் நான்கு அமைச்சர் பதவிகளைப் பெறும் வாய்ப்புகள் உள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் அமைச்சர் நியமனங்கள் வழங்குவது முழு நாட்டிற்கும் பயன் பொருத்தமாய் அமையும் என்று கூறியுள்ள அவர், ஜனாதிபதி ஆட்சி முறையை அகற்றுவது நாட்டுக்கு ஆபத்தாக முடியும் என்றும், வெஸ்டமினிஸ்டர் (இங்கிலாந்து ஆட்சி முறை) முறையை மீண்டும் அமுல்படுத்துவதை எதிர்த்துப் போராடப் போவதாகவும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பின் பயனைச் சில அமைச்சர்கள் அனுபவிக்கிறார்கள். ஆனால், இந்தியத் தொழிலாளர்களின் நிலையையும், அபிலாசைகளையும் அவர்கள் உணர்கின்றார்கள் இல்லை என்றார் அவர்.

இரண்டாம் மட்டத்தில் உள்ள அரச உறுப்பினர்கள் எனது மக்களின் குறைகளை உணர்ந்து கொள்ள முயல வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும். நான் ஒரு கபினட் அமைச்சர். ஆளும் கட்சியுடன் தோளோடு தோள் சேர்ந்து தேர்தல் களத்தில் நின்றேன். தோட்டத் தொழிலாளர் பற்றிய அரச உறுப்பினரின் மனப்பாங்கு மாற வேண்டும் என்று நான் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

ஜனாதிபதி ஆட்சிமுறையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த தொண்டமான், முழு நாட்டு மக்களினாலும் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி, நாட்டு மக்களுக்குப் பதில் சொல்லவேண்டிய நிலையில் நம்பிக்கையுடன் செயலாற்ற முடியும் என்றார்.

வெஸ்டமினிஸ்டர் முறைக்கு ஆட்சி அமைப்பை மாற்றுவதானது சிறுபான்மையினருக்கு சாதகமாக அமையாது. சிறு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வரும் கட்சியின் தலைவர், தனது கட்சியின் நன்மைகளைப் பாதுகாப்பதுடன் ஆட்சியைச் செய்வார். சிறுபான்மையினருக்கு எதிரான பெரும் பாகுபாடுகள் மற்றும் அனர்த்தங்களுக்கெல்லாம் காரணம் முன்னைய பாராளுமன்ற முறை தான் என்பது எனது திடமான கருத்தாகும்

ஜனாதிபதியின் கொலை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், அவசரப்பட்டு நாம் முடிவுகளுக்கு வருகிறோம். இந்தக் கொலையை யார் செய்தார்கள் என்பது குறித்து எமக்குத் தெளிவில்லை. உள்ளந்தரங்கமானநோக்கத்துடன் கொலை பற்றிக் கதைகள் புனையப்பட்டுள்ளன. விசாரணைகள் முடியும் வரை நாம் ஏன் பொறுத்திருக்கக்கூடாது? என்று கேட்டார்.

இனப்பிரச்சினை தொடர்பாக புலிகளும் அரசும் ஒருவரை மற்றவர் குறை சொல்வதைத் தவிர்த்து இந்தப் பிரச்சினையை உணர்ந்து ஒரு சமாதானத் தீர்வை எட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பித்த திட்டம் ஒரு சிறந்த ஆலோசனையாகவே தான் இன்றுவரை கருதுவதாகத் தெரிவித்த அமைச்சர் தொண்டமான், இத் திட்டம் ஒன்றை ஆட்சியின்கீழ் மிகக் கூடுதலான அதிகாரங்களைத் தமிழருக்கு வழங்கும் தன்னாட்சித் திட்டம் என்றார். மங்கள முனசிங்கா பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துகொள்ளுமாறு தனக்கு அழைப்பு விடுத்ததாகவும் அதில் கலந்துகொள்வது பயனற்றதும் என்றார்.

# பொலிசால் விடுவிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் கடத்தல்

[கொழும்பு]

பொலிசாரால் விடுவிக்கப்பட்ட இரண்டு தமிழ் வாலிபர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வெளியேவைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.

கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தின் முன்பாக நடந்த இந்த சம்பவம் பற்றி நேரில் கண்ட ஒருவர் விபரிக்கையில் மேலும் கூறியதாவது:

எனது மருமகன் தனியார் கம்பனியொன்றில் கடந்த ஒன்றரை வருடமாக வேலை பார்த்து வருகிறார். அந்த வேலைத்தளத்திலேயே தங்கி வந்தார். ஒரு சோதனையின் போது அவர் கைது செய்யப்பட்டு கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடன் ஏனைய பலரும் அழைத்துச்செல்லப்பட்டனர். செய்தியறிந்த நான் பொலிஸ் நிலையம் சென்று அவரைப் பிணை எடுத்து வந்தேன்.

பொலிஸ் நிலையத்திற்கு வெளியே காணப்பட்ட சிலர் நாம் வரும்போது எம்மை அழைத்தனர். அவர்களருகே சென்றபோது அடையாள அட்டையைக் கேட்டனர். காட்டியபோது ஊர் பண்டத்தரிப்பா என்று கேட்டனர். பதிலளித்தபோது மோட்டார் சைக்கிளில் பொலிஸ் சீருடையில் வந்த ஒருவரும் மற்றும் ஒருவரும் வீதிவழியே போன ஆட்டோவை மறித்து எனது மருமகனை ஏற்றிச் சென்றனர். அவருடன் மற்றுமொருவரும் ஏற்றிச் செல்லப்பட்டார். எங்கே கொண்டு செல்லப்படுகிறார் என்று கேட்டபோது மேல் விசாரணைக்கு என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த ஒருவாரத்திற்கும் மேலாக கோட்டை பொலிஸ் நிலையத்தில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சந்திரிகா - பென் ஜோன்சன் அநுராவின் ஒப்பீடு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் சந்திரிகா ஈட்டிய வெற்றியானது இஸப்பத்தனறாம மகா வித்தியாலய தடகள விளையாட்டுப் போட்டியில் பென் ஜோன்சன் வெல்வது போன்றதாகும்.

மேற்கு மாகாணசபைத் தேர்தலில் சந்திரிகாவின் வெற்றி பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா இவ்வாறு கூறினார்.

சந்திரிகா 'C' அணியில் ஓடினார். அவருக்குச் சமமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இல்லை. 1989-ல் நானும், எனது தாயாரும் மொத்தம் 3,24,000 வாக்குகளைப் பெற்றோம். சந்திரிகா 2,98,000 வாக்குகளைப் பதிவுசெய்துள்ளார். இது நல்ல தேர்தல் முடிவு. இது நல்ல வெற்றி அல்ல என்று கூற நான் சிறுமையானவனல்ல. இவை இவருக்கான தனிப்பட்ட வாக்குகள் என்று நினைத்து நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தலாமென்று சந்திரிகா எண்ணுவது முட்டாள்தனமானது என்றார் அவர்.

முன்பு இரு பண்டாரநாயக்காக்கள் போட்டியிட்டார்கள். இம்முறை ஒரு பண்டாரநாயக்காதான் போட்டியிட்டார். நானும், தாயாரும் (சிறிமாவோ) போட்டியிட்ட சமயம் சந்திரிகாவைவிட அதிகமான வாக்குகளை நாம் இருவரும் பெற்றோம். இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

## பிரேமா நினைவாக 'சுசரித்த'வில் நூதனசாலை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மூன்றாவது மாத நினைவாக தானம் வழங்கும் நிகழ்ச்சிக்குப் பின்னர் அவரது வாசஸ்தலமான சுசரித்த இல்லம் அவரது வாழ்க்கை வரலாற்றை சித்திரிக்கும் நூதனசாலையாக மாற்றியமைக்கப்படும் என்று கொழும்பு மாநகர மேயர் ரத்னசிறி ராஜபக்ஷா கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,பிரேமதாசா கொலை செய்யப்பட்டாலும் அவரது சுசரித்த இல்லத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த சமூக சேவைப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

## பிரேமா கொலை தொடர்பாக பொலிஸ் அதிகாரி கைது

### அவரது பாதுகாப்புப் பிரிவில் இருந்தவராம்

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி கொலை தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாசாவின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய பொலிஸ் சுப்பிரிண்டன் ஒருவரும் அவரது வாகன சாரதியும் அவசரகால சட்ட பிரிவின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

## சிங்கள பௌத்த எண்ணம் சர்வதேச ரீதியில் களங்கம்

### -ஞான அபிவன்ச தேரர் கவலை

(கொழும்பு)

சிங்கள பௌத்தம் என்ற எண்ணக் கருவை வளர்த்தன் மூலம் பௌத்த சமயத்தின் சர்வதேசத் தன்மையைக் களங்கப்படுத்தி விட்டார்கள் என்று வெள்ளவத்தைசுசிவிசத் தர்மா பிரிவின விகாராதிபதி வண. வெள்ளவத்தை ஞான ... தத்தை வளர்க்கும் பொறுப்பு அனைத்து மக்களினதும் பொறுப்பில் விடப்பட்டது. இன்று சிலர் பௌத்தத்தை தமது ஏகபோக உரிமையாக்கிக் கொண்டு சிங்கள பௌத்த எண்ணக் கருவை உருவாக்கியதன் மூலம் பௌத்தம் அதன் சர்வதேச தன்மையை ...

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் கொண்டு வரும் ஒரு மசோதா சிறிலங்கா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதென்பது சாதாரண விடயமல்ல. இந்நிலையில் நிறைவேறிய இச்சட்ட மூலத்தை சிங்கள அரசாங்கம் 'ஜனநாயகப் பாரம்பரியம்' எனப் பறைசாற்ற முற்படலாம். ஆனால், இது உண்மையில் சிங்களப் பேரினவாதிகளின் இனவாதத்தின் வெளிப்பாடு என்பதோடு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் தந்திரமும் ஆகும்,

எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலையில் ஐ. தே. கட்சி சுமத்தியதோ, அஃதே போன்று தனது அவசிய தேவை ஒன்றை சு. கட்சியின் மசோதா மூலம் ஐ. தே. கட்சி நிறைவேற்றுவதற்கு முடிவு செய்துள்ளது, அதாவது, கட்டாய இராணுவ சேவையால் உருவாகும் பாதகமான விளைவுகளுக்கு சு கட்சிபொறுப்பேற்க,சாதகமான விடயங்களை ஆளும் கட்சி பயன்படுத்த முற்படுகின்றது.

இதேவேளை, இம்மசோதா இரண்டு வருடங்களுக்கு முன்னர் சுதந்திரக் கட்சி எம். பி. ஒருவரால் கொண்டு வரப்பட்டாலும், அன்று ஆளும் கட்சி ஆதரவு காட்டவில்லை. இதற்குத் தமிழருக்கு எதிரான போரில் சிங்கள இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு வந்து இராணுவத்தில் சேருவார்கள் என்ற நம்பிக்கை அரசிற்கு இருந்ததே காரணமாகும். இதனால், கட்டாய இராணுவ சேவை அவசியமில்லை எனக் கருதப்பட்டது.' இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த போது இந்நிலை இருந்ததும் உண்மைதான். சிங்கள இளைஞர்கள் காலிமுகத் திடலில் இராணுவத்தில் சேருவதற்கென காத்துக் கிடந்தார்கள்.

ஆனால், இன்று மூன்றாண்டுகள் நிறைவுற்ற நிலையில் சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் எவ்வளவோ முயற்சிகளைச் செய்தும் அவை வெற்றி அளிப்பதாக இல்லை. மாறாக, இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுபவர்களையும், இறப்பவர்களையும் ஈடு செய்வதற்கே பெரும் முயற்சி எடுக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. அதாவது மூன்றாண்டு நடந்த உக்கிரப் போர் சிங்கள இளைஞர்களை அச்சம் கொள்ள வைத்துள்ளது.

இந்நிலையில்தான், முன்னர் புறக்கணித்த சட்டமூலத்திற்குத் தற்பொழுது ஐ. தே. கட்சி ஆதரவு கொடுத்துள்ளது. இதன் மூலம் தேவையான அளவில் இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளவும், தமிழருக்கு எதிராகத் தொடர்ச்சியாக யுத்தத்தை நடத்தலாம் எனவும் அரசாங்கம் கணக்குப் போடுகின்றது.

ஆனால், கட்டாய இராணுவ சேவையின் விளைவுகள் அரசாங்கம் எதிர்பார்ப்பதற்கு மாறாக அமையும் வாய்ப்புக்களே அநேகம். கடந்த காலத்தில் மனம் விரும்பி இராணுவத்தில் சேர்ந்து கொண்டவர்களே போரில் தாக்குப் பிடிக்க முடியாமல் தப்பி ஓடும் நிலையில் கட்டாய இராணுவ சேவை மூலம் சேர்த்துக் கொண்டவர்களினால் ஏற்படப் போகும் தொல்லைகள் பயங்கரமானவையாகவே இருக்கும். தற்பொழுதே இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களால் பல்வேறு தொல்லைகள் (கொலை, கொள்ளை, கற்பழிப்பு) அனுபவித்து வரும் அரசாங்கம் புதிய பிரச்சினை ஒன்றை விலை கொடுத்து வாங்குவதாகவே இது அமையும். என்ன செய்வது? பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புச் சிந்தனை சிங்கள இளைஞர்களை அமைதியாக இருக்கவிட,விரும்பவில்லை போலும்.

பொலிசாரால் விடுவிக்கப்பட்ட இரண்டு தமிழ் வாலிபர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வெளியேவைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.

கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தின் முன்பாக நடந்த இந்த சம்பவம் பற்றி நேரில் கண்ட ஒருவர் விபரிக்கையில் மேலும் கூறியதாவது:

எனது மருமகன் தனியார் கம்பனியொன்றில் கடந்த ஒன்றரை வருடமாக வேலை பார்த்து வருகிறார். அந்த வேலைத்தளத்திலேயே தங்கி வந்தார். ஒரு சோதனையின் போது அவர் கைது செய்யப்பட்டு கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடன் ஏனைய பலரும் அழைத்துச் செல்லப்பட்டனர். செய்தியறிந்த நான் பொலிஸ் நிலையம் சென்று அவரைப் பொலிஸ் நிலையத்திற்கு வெளியே காணப்பட்ட சிலர் நாம் வரும்போது எம்மை அழைத்தனர். அவர்களருகே சென்ற போது அடையாள அட்டையைக் கேட்டனர். காட்டியபோது ஊர் பண்டத்தரிப்பா என்று கேட்டனர். பதிலளித்தபோது மோட்டார் சைக்கிளில் பொலிஸ் சீருடையில் வந்த ஒருவரும் மற்றும் ஒருவரும் வீதிவழியே போன ஆட்டோவை மறித்து எனது மருமகனை ஏற்றிச் சென்றனர். அவருடன் மற்றுமொருவரும் ஏற்றிச் செல்லப்பட்டார். எங்கே கொண்டு செல்லப்படுகிறார் என்று கேட்டபோது மேல் விசாரணைக்கு என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த ஒருவாரத்திற்கும் மேலாக கோட்டை பொலிஸ் நிலையத்தில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஹன்சார்ட் விலை உயர்வை சபாநாயகர் அறியார்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகள் அடங்கிய ஹன்சார்ட் தொகுப்புகளின் விலைகள் உயர்த்தப்பட்ட போது மரியாதைக்காகவாவது என்னுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்று பாராளுமன்ற சபாநாயகர் எம். எச் முகம்மது கூறியுள்ளார்.

ஏற்றுமதிகள் இறக்குமதிகள் சட்டத்தின் சீரான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் உரையில் குறுக்கிட்டுப் பேசிய சபாநாயகர் மேலும் கூறுகையில்,

பொதுமக்கள் வாங்கக் கூடிய விலைக்கு ஹன்சார்ட் தொகுப்புக்கள் விற்கப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தொடர்பாக புலிகளும் அரசும் ஒருவரை மற்றவர் குறை சொல்வதைத் தவிர்த்து இந்தப் பிரச்சினையை உணர்ந்து ஒரு சமாதானத் தீர்வை எட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பித்த திட்டம் ஒரு சிறந்த ஆலோசனையாகவே தான் இன்றுவரை கருதுவதாகத் தெரிவித்த அமைச்சர் தொண்டமான், இத் திட்டம் ஒன்றை ஆட்சியின்கீழ் மிகக் கூடுதலான அதிகாரங்களைத் தமிழருக்கு வழங்கும் தன்னாட்சித் திட்டம் என்றார். மங்கள முனசிங்கா பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துகொள்ளுமாறு தனக்கு அழைப்பு விடுத்ததாகவும் அதில் கலந்துகொள்வது பயனற்றதும் என்றார்.

பாராளுமன்றத்தெரிவுக்குழு இலங்கைத் தொழிலாளர்காங்கிரசின் ஆலோசனைகளை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அதனைப் படித்துப் பார்க்கும் படி தான் நிர்ப்பந்தப் படுத்தியதன் பேரில் இறுதியில் ஓர் 'சடங்குபோல்' அதைப் படித்தார்கள். ஆனால் அதை அதிகம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

இவ்வாறு அமைச்சர் எஸ். தொண்டமான் ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்

# பிரேமா குடும்பத்திடமிருந்து நட்டஈடு பெற அரசு முயற்சி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியின் குடும்பத்தினரிடமிருந்து பல நட்டஈடுகளைப் பெறுவதற்கு ஜனாதிபதி விஜயதுங்கா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். குடும்ப ஆதிக்கம் செலுத்திப் பல சலுகைகளை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா தமது குடும்பத்தினருக்குச் செய்துகொடுத்துள்ளார் என்று புகாரிடப்பட்டுவருவது தெரிந்ததே.

ஏயார்லங்காவிற்கு ஊடாக பிரேமதாசாவின் மருமகன் றோகான் ஜெயக்கொடி ஜப்பானுக்குப் பூக்களை ஏற்றுமதி செய்தார் எனவும், இதற்கான கட்டணம் எதுவும் செலுத்தப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை ஜப்பானில் சிறிலங்காவிற்கான தூதுவர் ஒருவர் இருக்கும்போது தூதுவரைப் போன்ற தரத்தில் சகல வசதிகளோடும் ஜெயக்கொடியின் தந்தை டோக்கியோவில் இருந்தார் என்றும், இதனால் சிறிலங்காவுக்குப் பாரிய அளவில் வெளிநாட்டுச்செலாவணி இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இப்புகார்கள் தொடர்பாக பி. பி. சியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு கருத்து வெளியிட்ட பிரபல பத்திரிகையாளரான விக்டர் ஐவன் மேலும் கூறுகையில்; பிரேமதாசாவின் மகளான துலாஞ்சலியின் கணவர் றோகான் ஜெயக்கொடிக்கு ஏனைய வர்த்தகர்களை விட அதிக சலுகைகள் செய்து கொடுக்கப்பட்டது என்றும், நுவரெலியாவில் சுமார் 11 கோடி ரூபா பெறுமதியான நிலப்பரப்பு 99 வருட குத்தகைக்கு எடுத்துக் கொடுக்கப்பட்டது என்றும், இதற்காக பணமாக ரூ. 16,000 மட்டுமே செலுத்தப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை கானேசன் பூ வளர்ப்பிற்காக நோட்டன் நல்ல தண்ணிப் பகுதியில் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பை ஜெயக்கொடிக்கு வழங்க அமைச்சரவை அனுமதி பெறப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். இத்தகைய அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பான நட்டஈடுகளைப் பெறுவதற்கே டி. பி. விஜயதுங்க முயன்று வருவதாக விக்டர் ஐவன் மேலும் கூறியுள்ளார்.

## வயோதிபமாது காயம்

தீ விபத்தில் வயோதிபமாது படுகாயமடைந்தார். நேற்று முன்தினம் சனியன்று கொடிகாமம் மந்துவில் பகுதியில் நடந்த மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வீட்டில் விளக்கேற்றிய தீக்குச்சியை வீசிய போது அது ஆடையில் பட்டதால் நெருப்பு பற்றிக்கொண்டது. இதனால் கடும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரிவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட க. சின்னம்மா வயது(75) என்னும் அம்மாது ஆபத்தான நிலையில் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பிரேமா கொலை தொடர்பாக பொலிஸ் அதிகாரி கைது

### அவரது பாதுகாப்புப் பிரிவில் இருந்தவராம்

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி கொலை தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாசாவின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய பொலிஸ் சுப்பிரிண்டன் ஒருவரும் அவரது வாகன சாரதியும் அவசரகால சட்ட பிரிவின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

## சிங்கள பௌத்த எண்ணம் சர்வதேச ரீதியில் களங்கம்

### -ஞான அபிவன்ச தேரர் கவலை

(கொழும்பு)

சிங்கள பௌத்தம் என்ற எண்ணக் கருவை வளர்த்தன் மூலம் பௌத்த சமயத்தின் சர்வதேசத் தன்மையைக் களங்கப்படுத்தி விட்டார்கள் என்று வெள்ளவத்தைசுசிவிசத் தர்மா பிரிவின விகாராதிபதி வண. வெள்ளவத்தை ஞான அபிவன்ச தேரர் தெரிவித்தார்.

கடந்த புதனன்று பிரிவின வளாகத்தில் பெருந்திரளான பக்தர்கள் முன்னிலையில் பேசும்போது, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், வினைய விதிகளை நாட்டில் நடைமுறைப்படுத்தப் படாத வரையில் பௌத்த சாஸனம் நிலைநாட்டப்பட்டதாகக் கருத முடியாது என்று மகிந்தர் கூறியுள்ளார். பௌத்தத்தை வளர்க்கும் பொறுப்பு அனைத்து மக்களினதும் பொறுப்பில் விடப்பட்டது. இன்று சிலர் பௌத்தத்தை தமது ஏகபோக உரிமையாக்கிக் கொண்டு சிங்கள பௌத்த எண்ணக் கருவை உருவாக்கியதன் மூலம் பௌத்தம் அதன் சர்வதேச தன்மையை இழந்து களங்கப்பட்டு விட்டது என்றார்.

பௌத்த சிங்களத்தை வளர்ப்பவர்கள் மகிந்தர் ஒரு சிங்களவர் அல்லர் என்பதையும் மறந்து விட்டார்கள். சிங்கள பௌத்த எண்ணக் கருவை வளர்த்திராதிருந்தால் தமிழரும் சிங்களவரும் புரிந்துணர்வுடன் நடந்து கொண்டிருப்பார்கள். இனப்பிரச்சினையும் ஓரளவு தணிந்திருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வடகொரியாவின் முடிவிற்கு ஜப்பான் வரவேற்பு

(டோக்கியோ)

வடகொரியா அணு ஆயுத பரவல் தடுப்பு ஒபபந்தத்திலிருந்து விலகுவதாக விடுத்த அறிவிப்பை மீளப்பெற்றிருப்பதை ஜப்பான் வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக டோக்கியோவில் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்றில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; சர்வதேச அணுசக்தி ஏஜென்சிகள் வடகொரியாவிலுள்ள அணுசக்தி நிலையங்களை பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விட்டுள்ளது

வடகொரியாவின் இம்முடிவை வரவேற்றிருக்கும் அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் இது சமாதானத்தை நோக்கிய பாதையில் ஆக்கபூர்வமான ஒரு முன்னெடுப்பு என்றும் கூறியுள்ளார்.

## சாதுக்களின் சமய சடங்கு அயோத்தியில் பிசுபிசுப்பு

(டில்லி)

இந்துமதசாதுக்கள் அயோத்தியில் கடந்த ஞாயிறன்று நடத்திய விசேட சமாதான சடங்கு வைபவம் பிசுபிசுத்துப் போயிருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

உலகம் சுற்றும் மதகுரு என்று கூறப்படும் சந்திரா சுவாமியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த சமாதான சடங்குகளில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது அத்துடன் விசேட பாதுகாப்பிற்காக நூற்றுக்கணக்கான பொலிசாரும் அயோத்திக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த இரண்டுநாள் சடங்குகள் ஆரம்பமாகி ஐந்துமணி நேரம் கடந்த பின்பும் அமைப்பாளர் வரவில்லை என்றும் சுமார் 50 சாதுக்களும் 2000 பக்தர்களுமே கூடினர் என்றும் மேலும் தெரியவருகிறது.

இதேவேளை பிரதமர் நரசிம்மராவுக்கு நெருக்கமானவர் என்று கூறப்படும் சந்திரா சுவாமி மசூதியை மீண்டும் கட்டுவதற்கு வழி ஏற்படும் வகையில் இடத்தை துப்புரவு செய்ய முற்படுகிறார் என்றும் அங்குள்ள விக்கிரகங்களை கடத்த திட்டமிடுகிறார் என்றும் அதி தீவிரப்போக்குள்ள இந்துக்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

ஈழநாதம்

## இரத்தினபுரி பகுதியில் துப்பாக்கி தொழிற்சாலை

இரத்தினபுரி கஹவத்தையில் துப்பாக்கி தொழிற்சாலை ஒன்றை பொலிசார் கண்டு பிடித்துள்ளனர். இங்கு 'ஷொட்கண்', 'கல்கட்டாஸ்' எனஅழைக்கப்படும் துப்பாக்கிகளை தயாரிக்கபயன்படும் உபகரணங்களும் காணப்பட்டன

ஷொட்கன் ஒன்று 5000 ரூபாவாகவும், கல்கட்டாஸ் 3000 ரூபாவாகவும் இத் தொழிற்சாலையில் இருந்து விற்பனை செய்யப்பட்டதாம். தொழிற்சாலைக்கு பொறுப்பாக இருந்த நபர் பொலிசாரால் கைதானார்.

வவுனியா ஆடை தொழிற்சாலை

## வேலை நேரம் குறித்து ஊழியர்கள் அதிருப்தி

[வவுனியா]

வவுனியாவில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்குக் கையளித்த காலம் முதல் வேலை நேரம் ஒரு மணிநேரத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வவுனியா ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். அத்துடன் தங்களது சுகவீன லீவுக் காலமும் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்பு நாங்கள் பி. ப. 5 மணிவரை வேலை செய்தோம் இப்போது எமது வேலை நேரம் பி. ப. 6 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலதிகக் கொடுப்பனவுகள் வழக்கம் போல் தரப்படுவதில்லை.

சனியும், ஞாயிறும் வேலை நாட்களாகக் கணிக்கப்பட்டுள்ளன. மதிய போசன இடைவேளை 20 நிமிடங்களாகவும், தேநீர் வேளை 10 நிமிடங்களாகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதிக்கு முறையிடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இவ்வாறு தொழிலாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில் பார்க்கும் 400 தொழிலாளர்களுக்கும்தேவையான மலசலகூட வசதிகள் கூடச் சரியாக நிர்வாகத்தால் ஒழுங்கு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடாத்தும்

### கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும், பாரம்பரிய விளையாட்டுக் விழாவும்

05-07-93 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் நடாத்தும் அரங்கப் போட்டிகளும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறவிருக்கின்றன. யாழ்.மாவட்ட மட்டத்தில் நடைபெறவிருக்கும் இப் போட்டிகளில் கலந்துகொள்ளும் அமைப்புக்கள், தனிநபர்களுக்கான விதிமுறைகளைக் கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், நாடகங்களுக்கான எழுத்துப்பிரதிகளும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களில் 16-06-93க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

**அரங்க வகைகளும், போட்டி விதிமுறைகளும்:-**

1. பாரம்பரிய வழி அரங்கு:
   - அ) பாரம்பரிய வடிவங்களின் வழிவந்ததாக பாரம்பரிய வடிவங்களைப் பயன்படுத்தி புதிய உள்ளடக்கங்களைக் கூறுவதாக. (உ-ம்: களத்தில் காத்தான்) அமைதல்வேண்டும்.
   - ஆ) கலை வடிவத்தில் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகளை உள்ளடக்கியதாகவும், எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
   - இ) நிகழ்ச்சி 90 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
2. சமகால அரங்கு:
   - அ) இயல்பு நெறி அரங்கு (வழமையாக மேடையேற்றப்படும் நாடகங்களைப் போன்றது)
   - ஆ) மோடிமை அரங்கு குறியீட்டுப் பாங்கானவை (உ-ம்: உயிர்த்த மனிதர் கூத்து)
   - இ) இக்கலை வடிவத்தின் கருப்பொருள் கலை

# மக்கள் பேரணி மீது ஐ. நா. படைகள் தாக்குதல்

## 20 சோமாலியர் பலி

(மொகடிஸ்யூ)

சோமாலிய தலைநகரில் போராளித் தலைவர் முகமட் ஐதீதின் முக்கிய இலக்குகள் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்துவதை கண்டித்தும் ஐ நா அமைதிப் படையை வெளியேறும் படி கோரியும் நேற்று சோமாலிய மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி மீது ஐ. நா அமைதிப்படையின் பாகிஸ்தானிய படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20 சோமாலியர்கள் பலியாகினர்.

ஐ. நா. படையின் பாகிஸ்தானியபடையினர் 23 பேர் சோமாலிய போராளிக் குழு ஒன்று நடத்திய தாக்குதலில் பலியானதை அடுத்து அக்குழு மீது தாக்குதல்களை நடத்த ஐ நா பாதுகாப்புச் சபை அனுமதியளித்தது. இதையடுத்து அமெரிக்க விமானங்கள் முகமட் ஐதீதின் போராளிக் குழுவின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தின

நேற்றும் அமெரிக்க கப்பல் ஒன்று இக்குழுவின் ஆயுதக் களஞ்சியம் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தியது. இதே சமயம் ஐ. நாவின் பெயரைக்காக்கவே இத்தகைய தாக்குதல் நடைபெறுவதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் நேற்று தெரிவித்தார். கிளின்டன் பதவி ஏற்றபின் அமெரிக்கப்படைகள் நடத்தும் முதலாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## அ. தி. மு. க. அரசுக்குஎதிராக சுவாமி தீவிர பிரசாரம்

(சென்னை)

தமிழக அ. தி. மு. க. அரசுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களில் ஜனதாக்கட்சித் தலைவர் இந்த எதிர்ப்பு பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

இதனிடையே ஜனதாக் கட்சித் தலைவரின் கூட்டங்களை அ. தி. மு. க. தொண்டர்கள் கூச்சல்போட்டு குழப்பியும், தாக்குதல் மேற்கொண்டும் வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## தவறணைஉடைக்கும்முயற்சி தாக்குதலில் பலர் காயம்

(நெல்லியடி)

பூட்டப்பட்டிருந்த கள்ளுத் தவறணையை உடைக்க முற்பட்டவர்களை தடுத்த சிலர் பலத்த தாக்குதல்களுக்கு ஆளாகினார்கள். இச்சண்டையின்போது அருகில் உள்ள ஆலயத்தில் பதிக்கப்பட்டிருந்த சூலத்தைப் பிடுங்கி எடுத்து தாக்குதலை நடாத்தியபோது இளைஞர் ஒருவரின் மண்டை பிளந்தது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் மாலை 2-00 மணியளவில் புலோலி கிழக்கு உத்திராவத்தை என்னுமிடத்தில் நடைபெற்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:மது போதையில் வந்தவர்கள் சிலர், கள்ளுத் தவறணையை உடைக்க முற்பட்டனரென்றும், இதனை உடைக்கவேண்டாமென அங்கிருந்த சிலர் புத்திமதி கூற அதனை செவிசாய்க்காத கப்படுகிறது. சுமார் 3 மணித்தியாலம் வரை நடைபெற்ற சண்டையின்போது கற்கள், சயிக்கிள் செயின் போன்றவைகளுடன் ஒரு ஆலயத்தின் சூலமும் பயன்படுத்தப்பட்டது இச்சம்பவத்தின்போது சூலத்தின் தாக்குதலுக்குள்ளான புலோலி கிழக்கு சந்தா தோட்டத்தைச் சேர்ந்த சித்திரவடிவேல் உதயசுதன் (வயது 18) என்பவர் மண்டை பிளந்த நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். மேலும் காயமடைந்தவர்களான கற்கோம் புனித நகரைச் சேர்ந்த, பெருமாள் ஜெயச்சந்திரன் [வயது 23], பெருமாள் ஆனந்தன் [வயது 16] ஆகியோர் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சயிக்கிள் செயினால் தாக்குதலுக்குள்ளான குடும்பப் பெண்மணியான புலோலி கிழக்கு உத்திராவத்தையைச்

## பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் தொழிற்சாலையில் வேலை

(கொழும்பு]

மாகோ பொலிஸ் நிலையத்தில் சப் - இன்ஸ்பெக்டராகக் கடமை ஆற்றும் ஒருவர் அதே வேளை மாகோவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்வது கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணையை வீசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

பகலில் ஆடைத் தொழிற்சாலையில் கடமை புரிந்த சப் இன்ஸ்பெக்டர் இரவில் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்து வைத்தபின் வீட்டில் ஓய்வெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. தொழிற்சாலையில் வேலைசெய்து சப்-இன்ஸ்பெக்டர் 2000 ரூபா சம்பளம் பெற்றுள்ளார்.

கடமையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள சப்-இன்ஸ்பெக்டருக்கு எதிராக மாகோ நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

## மூழ்கிய கப்பல்களை மீட்க நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த வெள்ளியன்று இலங்கையின் தெற்கு கடலில் நேருக்கு நேர் மோதிச்சேதமடைந்த இந்திய சரக்குக் கப்பல்களை மீட்டு செப்பனிடும் பணியை கொழும்பு இன்ஜினியரிங் என்ரபிரைஸ் நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்திய சரக்குக் கப்பல்கள் விபத்துக்குள்ளானபோது அவற்றில் எம்.வி. ரவிதாஸ் என்ற இந்தியக் கப்பலை மூழ்குவதில் இருந்து காக்கும் பணியில் ''நில்கிரி'' கப்பல் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## சுழல் துப்பாக்கியுடன் பிக்கு பொலிசாரால் கைது

திவுலப்பிட்டியவில் சம்பவம்

இளம் பிக்கு ஒருவர் சுழல் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிசார் கூறியுள்ளனர்.

திவுலப்பிட்டியாவிலுள்ள பௌத்த விகாரையில் இருக்கும் பௌத்த இளம் பிக்குவிடம் சுழல் துப்பாக்கி இருப்பதாக கிடைத்த ரகசியத் தகவலை யடுத்து சிவில் உடையில் சென்ற பொலிசாரால் மேற்படி இளம் பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த நான்காம் திகதி இடம் பெற்றுள்ளது.

தனது பாதுகாப்புக்காக இத் துப்பாக்கியை வைத்திருந்ததாக பிக்கு கூறினார் என்றும் இத் துப்பாக்கி பாதுகாப்புப் படையினரிடம்இருந்து பெறப்பட்டது என்றும் பொலிசார் கூறியுள்ளனர்.

**திருத்தம்**

தொடர்பாக பாரிய சட்ட திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு சட்டத்தில் பாரிய திருத்தம் எதையும்செய்யும் உத்தேசம் உடனடியாக இல்லை என தெரிவித்தார்.

**தபால்**

முடியும் இதற்கு மேற்படி பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் இத்தபால் விநியோகத்துக்குப் பொறுப்பாக உள்ளவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு விண்ணப்பித்தால் திருமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் சேவையில் ஈடுபடும் கப்பலில் தபால்பொதிகளை குடாநாட்டுக்கு அனுப்பிவைப்பதன் மூலம் மேற்படி வாராந்த தபால் சேவையை சாத்தியமாக்குவதற்கு முயற்சிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**மாவீரர்**

பின் காங்கேசன் வீதியால் ஐந்துசந்தியை அடைந்து இறுதி ஊர்வலம் பொம்மைவெளி

எடக்கங்களைக் கூறுவதாக.

(உ-ம்: களத்தில் காத்தான்) அமைதல்வேண்டும்.

ஆ) கலை வடிவத்தில் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகளை உள்ளடக்கியதாகவும், எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.

இ) நிகழ்ச்சி 90 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

2. சமகால அரங்கு:

அ) இயல்பு நெறி அரங்கு (வழமையாக மேடையேற்றப்படும் நாடகங் களைப் போன்றது)

ஆ) மோடிமை அரங்கு குறியீட்டுப் பாங்கானவை (உ-ம்: உயிர்த்த மனிதர் கூத்து)

இ) இக்கலை வடிவத்தின் கருப்பொருள் கலை அம்சம் நிறைந்ததாகவும், சமகாலப்பிரச்சினை கள், நிகழ்வுகளையொட்டியதாகவும், எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.

ஈ) நிகழ்ச்சி 60 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

தயாரிப்பு மற்றும் போக்குவரத்துக்கான செலவினங் களை உருவாக்க அமைப்புக்களே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

**பொது அறிவுறுத்தல்கள்:**

1. நேரம் வரையறுக்கப்பட்ட அளவிலிருந்து 05 நிமி டங்கள் மட்டுமே முன்பின்னாக அமையலாம்.
2. ஒவ்வொரு உப பிரிவிலிருந்தும் பின்வரும் விடயங்கள் தனித்தனியாக பரிசுக்காகத் தெரிவுசெய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறந்த அரங்கு | 6. | ஒளி அமைப்பு |
| 2. | நெறியாள்கை | 7. | ஒலி அமைப்பு |
| 3. | எழுத்துரு | 8. | பாத்திரம் |
| 4. | இசையமைப்பு | 9. | ஒப்பனை |
| 5. | காட்சியமைப்பு | 10. | வேட உடுப்பு, |

**பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்:**

எமது பாரம்பரியமான பின்வரும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்:

| | | | |
|---|---|---|---|
| 1. | சீனடி சிலம்படி | 2. | கரகம் |
| 3. | கோலாட்டம் | 4. | ஆட்டக்காவடி |
| 5. | கிளித்தட்டு | 6. | கும்மி |
| 7. | போர்த் தேங்காய் அடித்தல். | | |

ஒவ்வொரு போட்டியிலும் தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமானம் மிக்க பரிசுகள் வழங்கப்படும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மேலதிக விபரங்களைப் பெறவேண்டுமாயின் அவ்வவ் மாவட்ட / கோட்ட கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கோண்டாவில்,
தமிழீழம்.
(சி/6834)

விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்.

ஆளாகினார்கள். இச்சண்டையின்போது அருகில் உள்ள ஆலயத்தில் பதிக்கப்பட்டிருந்த சூலத்தைப் பிடுங்கி எடுத்து தாக்குதலை நடாத்தியபோது இளைஞர் ஒருவரின் மண்டை பிளந்தது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 2-00 மணியளவில் புலோலி கிழக்கு உத்திராவத்தை என்னுமிடத்தில் நடைபெற்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: மது போதையில் வந்தவர்கள் சிலர், கள்ளுத் தவறணையை உடைக்க முற்பட்டனரென்றும், இதனை உடைக்கவேண்டாமென அங்கிருந்த சிலர் புத்திமதி கூற அதனை செவிசாய்க்காத இளைஞர்கள் மோதலில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக் சூலமும் பயன்படுத்தப்பட்டது இச்சம்பவத்தின்போது சூலத்தின் தாக்குதலுக்குள்ளான புலோலி கிழக்கு சந்தா தோட்டத்தைச் சேர்ந்த சித்திரவடிவேல் உதயசுதன் (வயது 18) என்பவர் மண்டை பிளந்த நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். மேலும் காயமடைந்தவர்களான கற்கோம் புனித நகரைச் சேர்ந்த, பெருமாள் ஜெயச்சந்திரன் [வயது 23], பெருமாள் ஆனந்தன் [வயது 16] ஆகியோர் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சயிக்கிள் செயினால் தாக்குதலுக்குள்ளான குடும்பப் பெண்மணியான புலோலி கிழக்கு உத்திராவத்தையைச் சேர்ந்த திருமதி பசுபதி சரஸ்வதி [வயது 47] என்பவரும் வேறு பல யுவதிகளும் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றார்கள். இதுபற்றி பருத்தித்துறை காவல்துறையினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (30)

## நினைவஞ்சலி நிகழ்வு

கட்டைபறிச்சானில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற நேரடி மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை டங்கா (மார்க்கண்டு அருமைநாயகம்] வின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

வீரவேங்கை டங்கா 1989/ 90ஆம் கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பிரிவிற்கு தெரிவுசெய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் அஞ்சலி நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கியஉறுப்பினர்களின் அஞ்சலி உரையுடன் சமூக மேம்பாட்டு பிரிவு ஆதரவுடன் திருமலை யாழ் கலைஞர்கள் ஒன்றிணைந்து வழங்கும் ''தாயகமண்'' நாடகமும் இடம்பெறும்.

இவ் அஞ்சலி நிகழ்வுகுறித்து திருக்கோணமலை மாவட்ட யாழ். பல்கலைக்கழக பட்டதாரி மாணவர் சங்க செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

### சம்பள

தரம் 4 — ரூபா 36,000 — 41,400 — (5×1080). தரம் 5 — ரூபா 27,000—30,000— (5×600).

இந்தச் சம்பளத்திட்டத்தை வழங்காது அரசு தாமதப்படுத்துவதனால் கல்வி பாதிக்கப்படுவதோடு திறமையுள்ள ஆசிரியர்கள் பலர் கல்விச் சேவையிலிருந்து விலகி வேறு வேலைகளில் சேர்ந்துகொள்கிறார்கள்என்று தொழிற் சங்கத்தின் தலைவர் எம். ஏ. ஸ்ரான்லி பெரேரா வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### விடுதலை

விடுத்துள்ளோம். ஆனால் இதுவரை அவர்களிடமிருந்து முறையான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

கேள்வி: விடுதலைப்புலிகள் நல்லெண்ண அடிப்படையில் உங்களுடனிருந்த இரு யுத்தக் கைதிகளை விடுதலை செய்திருந்தனர். இவர்களது விடுதலை சிங்கள மக்கள் மத்தியில் எவ்வகையான உணர்வலையை ஏற்படுத்தியது?

பதில்: நாம் சிங்கள மக்கள் எமக்கு உதவினரா என்ற விபரத்தை பெறமுடியவில்லை ஆனால் முதலில் இருவரும் விடுதலை செய்யப்பட்டதற்கு எம் நன்றியைப் புலிகளுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டிருந்தனர். பொதுமக்கள் எம் விடுதலை குறித்து எவ்வித அபிப்பிராயம் கொண்டிருந்தனர் என்பதைக் கூறுவதற்கு நாம் சிறையில் இருப்பதால் உடனடியாக அறியமுடியவில்லை. ஆனால் இவர்களிருவரும் எம் விடுதலை குறித்து உற்சாகத்துடன் நடவடிக்கை எடுத்திருந்தனர் என்று கூற வேண்டும்.

கேள்வி: சிறிலங்கா அரசிடம் நீங்கள் இதுவரையிலும் உங்களை விடுவிக்கும்படி விடுத்த கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்காமல் இருந்த அசமந்தப் போக்கு குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்; இதற்கு முன் நாம் கடிதம் மூலம் அரசுக்கும் புலிகளுக்கும் இது குறித்து தகவல் அனுப்பியதாகக் குறிப்பிட்டிருந்தோம். அரசியல் கடி தங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் எம்மால் அனுப்ப முடியாது. எனவே இதற்கான கடிதங்கள் விடுதலைப் புலிகளூடாகவே அனுப்பப்பட்டன. இக்கடிதங்கள் அரசிற்கு கிடைத்ததா அல்லது ஜனாதிபதி கவனிக்சத் தவறினாரா என்பது சொல்ல இயலாமல் இருக்கிறது.

வேலை செய்வது கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணையை விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

பகலில் ஆடைத் தொழிற்சாலையில் கடமை புரிந்த சப் இன்ஸ்பெக்டர் இரவில் பொ பெற்றுள்ளார்.

கடமையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள சப்-இன்ஸ்பெக்டருக்கு எதிராக மாகோ நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

## மூழ்கிய கப்பல்களை மீட்க நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த வெள்ளியன்று இலங்கையின் தெற்கு கடலில் நேருக்கு நேர் மோதிச்சேதமடைந்த இந்திய சரக்குக் கப்பல்களை மீட்டு செப்பனிடும் பணியை கொழும்பு இன்ஜினியரிங் என்ரபிரைஸ் நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்திய சரக்குக் கப்பல்கள் விபத்துக்குள்ளானபோது அவற்றில் எம்.வி. ரவிதாஸ் என்ற இந்தியக் கப்பலை மூழ்குவதில் இருந்து காக்கும் பணியில் ''நில்கிரி'' கப்பல் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## தனிச் சிங்களத்தில் பரீட்சை விண்ணப்பம்

கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள தலைமை அலுவலகம் அரசாங்க வைத்திய சாலைகளில் கடமையாற்றும் தரம் மூன்றை சேர்ந்த மருந்துக் கலவையாளர்களுக்கு இவ் வருடம் நடாத்தப்படும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை பற்றிய சுற்று நிருபத்தை தனிச் சிங்கள மொழியில் வெளியிட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவமும் தனிச் சிங்கள மொழியில் இருப்பதால் வடபகுதியைச் சேர்ந்த சிங்களம் தெரியாத மருந்துக் கலவையாளர்கள் இதனைவிளங்கிக்கொள்ள முடியாது மிகுந்த சிரமமடைகின்றார்கள்.

இதேவேளை இப்பரீட்சையை வடபகுதியிலுள்ள மருந்துக் கலவையாளரின் போக்குவரத்து வசதியை முன்னிட்டு கொழும்பில் நடாத்துவதற்கு பதிலாக யாழ். போதனா வைத்தியசாலையில் அல்லது யாழ் தாதிகள் பயிற்சி பாடசாலையில் நடாத்துமாறு யாழ். பிரதேச மருந்து கலவையாளர்கள் சங்க செயலாளர் திரு. நா. மா. கந்தசாமி சுகாதார அமைச்சிடம் மகஜர் ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்,

### வீரகுமார்

தெரிவித்துள்ளனர். வீரகுமார் குறித்து ஏற்கனவே பல தகவல்கள் புலனாய்வுத்துறை பெற்றுள்ளபோதிலும் மேலும் பல தகவல்களை இவ்வாறு துண்டுப்பிரசுரங்களை வானிலிருந்து வீசுவதன் மூலம் தமிழ் மக்களிடம் இருந்து பெறமுடியும் என அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதேசமயம் இத்தகைய துண்டுப் பிரசுரங்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள அகதி முகாம்களிலும் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### சமாதானக்

செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் ஆயுதப்படையினருக்குத் தேவையான ஆயுதங்களை சீனாவிலுள்ள ''நெரிஸ்கோ''கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்வது குறித்து அமைச்சரவை முடிவு செய்யவில்லை என வேறொரு கேள்விக்குப் பதிலளிக்கையில். மேலும் அவர் தெரிவித்தார்

யோகத்துக்குப் பொறுப்பாக உள்ளவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு விண்ணப்பித்தால் திருமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் சேவையில் ஈடுபடும் கப்பலில் தபால்பொதிகளை குடாநாட்டுக்கு அனுப்பிவைப்பதன் மூலம் மேற்படி வாராந்த தபால்சேவையை சாத்தியமாக்குவதற்கு முயற்சிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### மாவீரர்

பின் காங்கேசன் வீதியால் ஐந்துசந்தியை அடைந்து இறுதி ஊர்வலம் பொம்மைவெளி வீதி வழியால் நாவாந்துறைக்கு வந்தது அங்கிருந்து பிரதான வீதிவழியாக நான்காம் குறுக்குத்தெரு கடற்கரை வீதிவழியாக புகழுடல் தாங்கிய ஊர்தி பிற்பகல் குருநகரை அடைந்தது. குருநகர் தண்ணீர் தாங்கி வீதியில் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. அங்கிருந்து இறுதி ஊர்வலம் கைதடியை சென்றடைந்தது. அங்கிருந்து புகழுடல்கள் சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளுக்கும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

வீதி எங்கும் கறுப்புக் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டன. சோக கீதங்கள் இசைக்கப்பட்டன. இறுதி ஊர்வலம் இன்று வடமராட்சியில் பலபகுதிகளூடாக செல்லும் புகழுடல்கள் இன்று செம்பியன்பற்று, நாகர்கோவில், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். அதனை தொடர்ந்து வடமராட்சி மாவீரர் துயில் இல்லத்தில் புகழுடல்கள் விதைக்கப்படும்,

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 13-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9833

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 28-1049, | 26-8600, | 26-5517, | 26-5870, | 26-5113 |
| 41-9480, | 24-0576, | 26-4792, | 26-0987, | 40-2677 |
| 26-1019, | 26-0786, | 40-1688, | 27-2016, | 26-6398 |
| 28-2464, | 26-9495, | 42-9345, | 43-1019, | 41-9895 |
| 42-2397, | 41-7041, | 26-7353, | 26-2277, | 26-0763 |
| 24-8212, | 26-2668, | 26-1349, | 24-4261, | 27 5045 |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 26-9145, | 24-6475, | 26-1735, | 24-0422, | 26-2654 |
| 40-2573, | 27-4289, | 26-5777, | 24-6211, | 41-8035 |
| 26-4443. | | | | |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.